

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு

(2013-2014)

பதினான்காவது பேரவை

11 முதல் 15 வரையிலான அறிக்கைகள்

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை–600 009.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2013–2014)

(பதினான்காவது பேரவை)

பதினொன்றாவது அறிக்கை

"சுற்றுலா"

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 25 JUL 2014)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை – 600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2013–2014)

(பதினான்காவது பேரவை)

பதினொன்றாவது அறிக்கை

"சுற்றுலா"
குறித்த மதிப்பீடு தொடர்பான குழுவின் அறிக்கை

பொருளடக்கம்

		பக்கம்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு	...	i
முன்னுரை	...	iii

பாகம் – 1 அறிக்கை

I	முகவுரை ...	1
II	பரவசமூட்டும் தமிழ்நாடு நீங்களே அனுபவியுங்கள்(Enchanting Tamil Nadu - Experience Yourself) ...	1–2
III	கூட்டங்கள், ஊக்குவித்தல் சுற்றுலா, மாநாடுகள் மற்றும் பொருட்காட்சிகள் (Meetings, Incentives, Conventions and Exhibitions) ...	2
IV	தமிழ்நாட்டில் சுற்றுலா பயணிகளின் வருகையினை முதல் இடத்திற்கு கொண்டுவருதல் ...	3–4
V	சுற்றுலா துறையின் மூலம் வேலைவாய்ப்பு ...	4–5
VI	வசதி படைத்த வர்த்தக சுற்றுலா பயணிகளுக்கு சாகச சுற்றுலா பயணம், நீர்சாகச விளையாட்டு, பொழுதுபோக்கு அம்சங்கள் ஏற்படுத்துதல் ...	5–6
VII	இந்தியாவின் சுற்றுலா சந்தை ஒரு கண்ணோட்டம் ...	6
VIII	" தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023 " ...	6–7
IX	பிரபலமாகாத சுற்றுலா மையங்களை கண்டறிதல் ...	7–8
X	சுற்றுலா வழிகாட்டிகளுக்கு துறையால் வழங்கக்கூடிய பயிற்சி ...	9
XI	சுற்றுலாத் தலங்களில் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை தடை செய்தல் ...	9–12
XII	சுற்றுலாத் தலங்கள் குறித்த விவரங்களை விளம்பரப்படுத்துதல் ...	12–14
XIII	மருத்துவ சுற்றுலா மற்றும் நலம் பேணும் சுற்றுலா ...	14
XIV	புதிய சுற்றுலா கொள்கை ...	14–15
XV	மாநில அரசின் நிதி உதவித் திட்டங்கள் ...	15–23
XVI	பகுதி – II திட்டங்கள் ...	23–24
XVII	சுற்றுலாத் தலங்களுக்கு செல்லும் சாலைகளை மேம்படுத்துதல் ...	24–25
XVIII	மத்திய அரசு நிதி உதவித் திட்டங்கள் ...	25–28

XIX	2013–2014 – ஆம் ஆண்டு மத்திய அரசு முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்	...	28
XX	சுற்றுலாத் துறையின் அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி	...	28–29
XXI	சுற்றுலாத் துறையின் விருந்தோம்பலை மேம்படுத்துதல்	...	29–31
XXII	தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள்	...	31–32
XXIII	சுற்றுலாத் துறையால் சர்வதேச மற்றும் இந்தியாவில் இதர மாநிலங்களில் நடத்தப்படும் விழாக்கள்	...	32
XIV	தமிழ்நாட்டின் காலாச்சாரம் அடிப்படையில் நடத்தப்படும் விழாக்களை இதர மாநிலங்களில் நடத்துதல்	...	33
XXV	சுற்றுலா வளர்ச்சிக்காக மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழு	...	33–34
XXVI	சுற்றுலா மற்றும் சமூகம் சார்ந்த சுற்றுலா	...	34–35
XXVII	வணிகச் சின்னத்தை பிரபலபடுத்துதல்	...	35–36
XXVIII	சுற்றுலா அலுவலகங்கள் அனைத்தும் சர்வதேச தரத்திற்கு தரம் உயர்த்துதல்	...	36–37
XXIX	ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு சுற்றுலாத் துறையில் உள்கட்டமைப்பு மேம்பாடு மூலதனத் திட்டம்	...	37–38
XXX	மாநில அளவிலான வழிகாட்டு குழு மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு	...	38
XXXI	தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம்	...	38–39
XXXII	தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்படும் உணவு விடுதிகளின் தரத்தினை மேம்பாடு செய்தல்	...	40–41
XXXIII	தமிழ்நாடு சுற்றுலா வளச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்	...	41–42
XXXIV	சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் படகுகளை வடிவமைத்தல்	...	42–43
XXXV	முட்டுக்காடு படகுக் குழாம் பகுதிகளை சுத்திகரித்தல்	...	43–44
XXXVI	தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தில் நடத்தப்படும் திருமலை திருப்பதி கோவிலுக்கு கூடுதல் தரிசன சீட்டு ஒதுக்கீடு பெறுதல்	...	45
XXXVII	உதகை ஏரியை தொடந்து சீரிய முறையில் பராமரித்தல்	...	45–46
XXXVIII	மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் உதகை படகு இல்லத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள்	...	46
XXXIX	குழு ஆய்வுப்பயணம் மேற்கொண்ட மாவட்டங்களில் அபிவிருத்தி பணிகள்	...	46–50

பாகம் – 2
நிகழ்ச்சி பகுதி

			51–64
இணைப்பு–I	ஆண்டுதோறும் நடத்தப்படும் முக்கிய விழாக்கள்	...	65
இணைப்பு–II	தமிழ்நாடு சுற்றுலாக்கழகத்தால் நடத்தப்படும் சுற்றுலாக்கள்	...	67–68
	பரிந்துரைகளின் சுருக்கம்	...	69–76
	குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்	...	77

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2013–2014)

(2013–ஆம் ஆண்டு மே திங்கள் 16–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)

தலைவர்

1. திரு. அ. பாப்பாசுந்தரம்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்
நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் (அலுவல் காரணமாக)

3. $ திரு. ச. இராமச்சந்திரன்
தலைவர், பொதுக்கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
@திரு. பி.வி. கதிரவன்
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)

4. திரு. பி.ஜி. நாராயணன்
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திருமதி த. இந்திராகாந்தி
6. திரு. செ. காமராஜ்
7. டாக்டர் க. கிருஷ்ணசாமி
8. திரு. சு. குணசேகரன்
9. திரு. அர. சக்கரபாணி
10. திரு. ஆர். சாமி
11. திரு. ஆர். சீனிவாசன்
12. திரு. தங்கதமிழ்செல்வன்
13. திரு. ப. தன்சிங்
14. திரு. வ. நீலகண்டன்
15. திரு. ச. பழனிச்சாமி
16. திரு. எஸ்.ஆர். பார்த்திபன்
17. செல்வி கே. பாலபாரதி
18. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
19. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் . . செயலாளர்

திரு. க. பாலசுப்பிரமணியன் . . இணைச் செயலாளர்

திரு. க. பூபதி . . துணைச் செயலாளர்

$ 9.12.2013 ஆம் நாள் வரை
@ 26.5.2014 ஆம் நாள் வரை

முன்னுரை

2013–2014–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 16.5.2013–ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது. இக்குழுவில் 16 உறுப்பினர்கள் உள்ளனர். இது தவிர மாண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர், பொது கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் அலுவல் காரணமாக இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.

2013–2014–ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு தனது ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட ஐந்து மதிப்பீடுகளில், " சுற்றுலா " மதிப்பீடும் ஒன்றாகும். "சுற்றுலா" குறித்த மதிப்பீட்டை கூர்ந்தாய்வு செய்வதற்காக குழு, தேனி, திண்டுக்கல், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர், திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை, வேலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய 11 மாவட்டங்களில் ஆய்வுப் பயணம் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துறையின் மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் கலந்துரையாடியது. 17.2.2014 அன்று சென்னையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் அரசு முதன்மைச் செயலாளர், ஆணையர், சுற்றுலா மற்றும் துறையின் இதர அலுவலர்களுடன் குழுவின் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இவ்வறிக்கைக்கு 30.5.2014 அன்று குழு ஒப்புதல் அளித்தது. " சுற்றுலா" குறித்த குழுவின் அறிக்கை பின்வரும் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

குழுவின் சார்பாக அறிக்கையை சட்டமன்றப் பேரவைக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகிய நான், " சுற்றுலா" குறித்த இந்த அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

" சுற்றுலா " தொடர்பான மதிப்பீட்டினை ஆய்வு செய்வதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் அளித்த சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அலுவலர்களுக்கு குழு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது. பார்வையிடுவதற்கு வசதியாக குழுவின் பரிந்துரைகள் பெரிய எழுத்துக்களில் (Bold) அச்சிடப்பட்டுள்ளன. இவ்வறிக்கையுடன் பரிந்துரைகளின் சுருக்கம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை – 600 009,
நாள்: 30.5.2014,
வைகாசி 16,
திருவள்ளுவர் ஆண்டு – 2045.

அ.பாப்பாகந்தரம்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

பகுதி –I

"சுற்றுலா" குறித்த அறிக்கை

I. முகவுரை

1. இந்திய துணைக் கண்டத்தில், தென்பகுதியில் வசீகரிக்கச் செய்யும் பழமை வாய்ந்த தீபகற்ப நிலப்பகுதி தமிழ்நாடு ஆகும். சுற்றுலாவைப் பொறுத்தவரை, தமிழகம் பல்வேறு பரிணாமங்களைக் கொண்டது என்றும், கோவில் நகரங்கள், வரலாற்று நினைவுச் சின்னங்கள், வனவிலங்குகள் மற்றும் பறவைகள் சரணாலயங்கள், மலைவாழிடங்கள், அருவிகள், கடற்கரைகள், நெஞ்சையள்ளும் சமவெளிகள், கடல் மணற்பகுதி, வெப்பமண்டல சதுப்பு நில மரக்காடுகள், எண்ணற்ற வழிபாட்டுத் தலங்கள் இடம் பெற்ற கோட்டைகள் செறிந்த பண்பாடு மற்றும் கலாச்சாரம், இசை மற்றும் நாட்டிய விழாக்கள் இவையெல்லாம் தமிழ்நாட்டின் சுற்றுலாச் செல்வங்களாகும். இந்த செல்வச் செழிப்பை "பரவசமூட்டும் தமிழ்நாடு நீங்களே அனுபவியுங்கள்" பிரசாரத்தின் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளதால் சுற்றுலாப் பயணிகள் மீண்டும் மீண்டும் தமிழ்நாட்டிற்கு வருகை புரிகின்றனர்.

2. மேலும், சுற்றுலாத் துறையின் மூலம் அதிகளவில் வேலைவாய்ப்புகளைப் பெருக்க முடியும். எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ளவும், மக்களிடையே கலாச்சாரப் பகிர்விற்கும், சுற்றுலா உதவியாக அமைந்து வருகிறது. தேசிய ஒருமைப்பாடு, சர்வதேச புரிந்துணர்வு ஆகியவற்றுக்கும், சமூக–பொருளாதார வளர்ச்சியை நேரடியாக ஊக்குவிக்கவும், சுற்றுலா ஒரு காரணியாக செயல்படுகிறது.

II. பரவசமூட்டும் தமிழ்நாடு நீங்களே அனுபவியுங்கள் (Enchanting Tamil Nadu - Experience Yourself)

3. "பரவசமூட்டும் தமிழ்நாடு நீங்களே அனுபவியுங்கள்" என்கிற தமிழ்நாடு சுற்றுலாவின், பரவசமூட்டும் பிரசாரம் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஊடகம் சார்ந்த மேம்பாட்டு நடவடிக்கைகளான விளம்பரங்கள், பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானங்களில் வழங்கப்படும் சஞ்சிகைகள் மற்றும் ஏனைய பயணம் சார்ந்த பத்திரிகைகளில் வெளியிடப்படுவதன் மூலமாகவும், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்களில் சிறிய இடைவெளியில் சுற்றுலா விளம்பரங்களை வெயிடப்படுவதன் மூலமாகவும், முன்னோடி சுற்றுலா திட்டங்கள் குறித்த விளக்கங்களும் அளிக்கப்படுகிறது. பன்னாட்டு சுற்றுலாச் சந்தைகள், உள்நாட்டு பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களில் பங்குகொண்டு தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை விளம்பரப்படுத்தப்படுவதால், இந்திய மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத் தொழில் துறைகளில் ஆக்கப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. " பரவசமூட்டும் தமிழ்நாடு " என்ற சொற்றொடர் பரவலாக அறியப்பட்டு சுற்றுலா குறியீடாக உலக அரங்கில் உருவெடுத்துள்ளது. அதன் விளைவாக சுற்றுலாப் பயணிகள் வருகை வெகுவாக உயர்ந்துள்ளது.

4. கடந்த மூன்று ஆண்டுகளில் சுற்றுலா பயணிகளின் வருகைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	வருடம்	உள்நாடு (இலட்சத்தில்)	வெளிநாடு (இலட்சத்தில்)	மொத்தம்	விழுக்காடு
1	2011	1367.51	33.08	1400.59	32.36
2	2012	1841.37	35.62	1876.99	34.01
3	2013	2442.32	39.90	2482.22	32.24

5. சுற்றுலா வளர்ச்சி குறித்த ஆய்வில், கடந்த மூன்று ஆண்டுகளில் மிகவும் வளர்ச்சியடைந்துள்ளது என்றும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதிலும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதிலும், 4–வது மற்றும் 5–வது இடத்தில் இருந்த தமிழகம், இன்றைக்கு இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதைக் குழுவிற்குத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும், சுற்றுலா தலங்களைப் பொறுத்தமட்டில், God's own country என்று கேரளாவை அழைப்பார்கள். இன்றைக்கு, நமது தமிழகம் சுற்றுலாத் துறையில் கேரளத்தையே மிஞ்சியுள்ளது என்று துறையின் அரசு முதன்மைச் செயலாளர், குழுவிற்குத் தெரிவித்தார்.

III. கூட்டங்கள், ஊக்குவித்தல் சுற்றுலா, மாநாடுகள் மற்றும் பொருட்காட்சிகள் (Meetings, Incentives, Conventions and Exhibitions)

6. வலிமையான தொழில்துறை அடித்தளத்தை தமிழ்நாடு பெற்றிருந்தாலும் வணிகத்திலும் ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன. கூட்டங்கள், ஊக்குவித்தல் சுற்றுலா, மாநாடுகள், பொருட்காட்சிகள் ஆகியவைகளை உள்ளடக்கிய சுற்றுலா MICE Tourism (Meetings, Incentives, Conventions and Exhibitions) என அழைக்கப்படுகின்றது. சென்னை மற்றும் கோவை நகரங்களில் வர்த்தகம் தொடர்பான கூட்டங்கள் / கண்காட்சிகள் நடத்துவதற்கு அனைத்து நவீன வசதிகளைக் கொண்ட அரங்குகள் உள்ளன என்றும், இரு நகரங்களிலும் சர்வதேச அளவிலான மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளை நடத்த முடியும் என்றும், மாநிலத்தின் தலைநகரில் உள்ள சென்னை வர்த்தக மையம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள கொடிசியா வளாகம் ஆகியன இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன என்றும், தனியாரால், சென்னையில் அமைந்துள்ள ITC Grand Chola Hotel மற்றும் பிற முக்கிய நகரங்களான திருச்சி, மதுரை கோவை ஆகியவற்றில் இரண்டு நட்சத்திரம் முதல் ஆறு நட்சத்திரம் வரை உள்ள நட்சத்திர அந்தஸ்து உள்ள ஹோட்டல்களில் மாநாட்டுக் கூட்ட அரங்குகள் உள்ளன என்றும், இவற்றில் கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் நடத்த வசதிகள் உள்ளன. மேலும், மத்திய சுற்றுலா அமைச்சகம் வழிமுறைகளில் மாநாட்டு / கருத்தரங்கு அரங்குகள் அமைக்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு வருமானவரி விலக்கு, மாநாட்டுக்கூட உபகரணங்கள் இறக்குமதி செய்யும்போது வரிவிலக்கு, வெளிநாடுகளில் வழங்கப்படும் சுற்றுலா கையேடுகளில் மாநாடு கூடம் குறித்த விவரங்கள் இடம் பெற செய்தல், ஆகிய வகையில் ஊக்குவிக்கிறது என துறையால் தெரிவிக்கப்பட்டது.

IV. தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை முதல் இடத்திற்கு கொண்டுவருதல்

7. தமிழ்நாட்டில், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்காக, சுற்றுலாத்துறை பன்னாட்டு சுற்றுலாச்சந்தைகளான பசிபிக் ஆசியா பயண கருத்தரங்கு, சீனா உலக சுற்றுலா பயணச்சந்தை, WTM-London, ITB – பெர்லின் மற்றும் சென்ற ஆண்டு பாரிஸ் நகரில் நடைபெற்ற தமிழ்நாடு சுற்றுலாவின் விளம்பர முகாம் / சந்தைப்படுத்துதல் போன்ற நிகழ்வுகளிலும் தேசிய சுற்றுலா சந்தைகளான

1) பயணம், சுற்றுலா, கண்காட்சி (TTF – Chennai Travel unit)
2) பயணம், சுற்றுலா, கண்காட்சி (TTF – Kolkatta)
3) அகில உலக இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி – புதுதில்லி
4) அகில உலக இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி – பெங்களூரு
5) இந்தியா முழுவதும் – பொங்கல் சுற்றுலா விழா
6) தேயிலை – சுற்றுலா விழா ஊட்டி
7) மாங்கனி விழா – கிருஷ்ணகிரி
8) மலைவாழ் இடங்களில் நடைபெறும் – கோடை விழா
9) திருவண்ணாமலை – தீபத் திருவிழா
10) அனைத்து சுற்றுலா தலங்களிலும் உலக சுற்றுலா தினம்
11) மாமல்லபுரத்தில் நடைபெறும் இந்திய நாட்டிய விழா

போன்ற நிகழ்வுகளை நடத்துவதன் மூலமாகவும், சுற்றுலா வெளியீடுகள், நினைமுனை (Pendrive) வழங்குதல், தூய்மை விழிப்புணர்வு முகாம் நடத்துதல், சுற்றுலாத்தலங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி முக்கிய சுற்றுலாத்தலங்களில் சுற்றுலா பாதுகாவலர்களை நியமித்தல் முதலிய நடவடிக்கைகளின் விளைவாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது என துறையால் தெரிவிக்கப்பட்டது.

8. மேலும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கைகளில் தமிழ்நாட்டை முதல் இடத்திற்கு கொண்டு வருவதற்கு பல சீறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவைகளில் "பரவசமூட்டும் தமிழ்நாடு நீங்களே அனுபவியுங்கள்" என்கிற பிரசாரம், தொலைக்காட்சி, பத்திரிகைகள், புத்தகங்கள், Inflight Magazine போன்றவற்றில் விளம்பரம் செய்து, சுற்றுலா உள்நாட்டு சந்தைகள் வெளிநாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்குகொண்டு, தமிழ்நாடு சுற்றுலா வளங்களை எடுத்துரைத்தல், சுற்றுலா பயண முகவர்களை ஊக்குவித்தல், சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல், சுற்றுலாத்தலங்களை தூய்மையாக பேணுதல், வழிகாட்டி பயிற்சிகளில் சேவை புரிவோர்களுக்கு பயிற்சிகள் , நமது கலாச்சாரம், பண்பாடு ஆகியவைகளை எடுத்துரைக்கும் நோக்கோடும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கவும், பல சுற்றுலாத் தலங்களில் அந்தந்த காலத்திற்கேற்ப விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் துறையால் தெரிவித்துள்ளது.

9. இமயம் முதல் கன்னியாகுமரி வரை சுற்றுலாப்பயணிகள் இரயில் மார்க்கமாகவும், தரைவழி மார்க்கமாகவும், வான்வழி மார்க்கமாகவும் எளிதில் வந்து செல்லமுடிகிறது. இதன் மூலம் பல்வேறு கால கட்டங்களில் தமிழ்நாட்டில் நடைபெறும் பல்வேறு விழாக்களை உள்நாட்டு சுற்றுலா பயணிகள் கண்டு களிக்க முடிகிறது.

10. சுற்றுலாத்துறையால் பலதரப்பட்ட திட்டங்கள் மூலமாக அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தப்பட்டுள்ளதால் ஒவ்வொரு ஆண்டும் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து கொண்டு வருகிறது. தென்னிந்தியாவின் நுழைவாயில் சென்னை என்பதாலும், சர்வதேச விமானநிலையம் இங்கு அமைந்துள்ளது என்பதாலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளது. இதன்மூலம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்தியாவில் தமிழ்நாடு மூன்றாம் இடத்திலிருந்து இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளது என்றும் துறையால் தெரிவிக்கப்பட்டது. இந்தியாவில் சுற்றுலாத் துறையினை முதல் இடத்திற்கு கொண்டுவர துறை தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

V. சுற்றுலாத் துறையின் மூலம் வேலைவாய்ப்பு

11. சுற்றுலாவை ஒரு தொழிலாக அங்கீகரித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஒரு சுற்றுலாப் பயணி சுற்றுலாத் தலத்திற்கு வருகை புரியும்போது அவ்விடத்தில் தங்குவதால் தங்கும் விடுதி மற்றும் அதனைச்சார்ந்த சேவைகள் மூலமும், பிற சுற்றுலா காரணிகளான வாடகை கார் சேவை, கைவினைப் பொருட்கள் விற்பனை முதலியவற்றில் பணியாற்றுகின்ற செயல்திறன் பெற்ற மற்றும் திறன் பெறாத பணியாளர்கள் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். மேலும், சுற்றுலாப் பயணிகளால் செலவிடப்படுகின்ற தொகை அந்தப் பகுதியிலுள்ள சேவை செய்வோர்களுக்கு சென்றடைகிறது. சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்ற சுற்றுலாத் தலங்களில் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குவதாலும், சாலைவசதிகளை மேம்படுத்துவதாலும், பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்துவதாலும் அங்கு அதிக சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்றனர்.

12. சுற்றுலா வழிகாட்டிகள், சுற்றுலா சேவைபுரிவோர் மற்றும் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு பல்கலைக்கழகங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் தொல்லியல் துறை மூலமாக 7 இலட்சம் ரூபாய் செலவில் திறன்வளர்ப்பு பயிற்சி என்கிற ஒரு பயிற்சி கொடுக்கப்படவுள்ளது என்றும், மதுரையிலுள்ள Centre for Entrepreneur Development மற்றும் சுற்றுலாத் துறையின் மூலமாக அப்பயிற்சி கொடுக்கப்படவுள்ளது என்றும், அப்பயிற்சிக்குப் பின் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். சுற்றுலா தலங்களில் வழிகாட்டுதலுக்கு எவ்வளவு பணம் கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்படவிருக்கிறது என்றும், அதற்கான நடவடிக்கையினை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையால் மேற்கொள்ளப்படுகிறது என்றும், அதற்கான கருத்துருவினை துறையின் ஆணையர் அவர்கள் அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், அது அரசின் பரிசீலனையில் உள்ளது என்றும், சுற்றுலாத் துறையின் அரசு முதன்மைச் செயலர் தெரிவித்தார். தமிழ் மற்றும் ஆங்கில வழிகாட்டிகள், பிரஞ்ச் மற்றும் ஸ்பேனிஷ் போன்ற அயல்நாட்டு மொழி வழிகாட்டிகள், வழிகாட்டுதலுக்கான (Guide Fee) கட்டணம் குறித்த விவரங்கள் அறிவிப்பு பலகையில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு பயிற்சி பெற்ற வழிகாட்டிகள் தங்களுடன் பயிற்சியின்போது வழங்கிய சான்றிதழ் வைத்திருக்க வேண்டும் என்றும், சுற்றலாத் துறையின் அரசு முதன்மைச் செயலர் குழுவிற்கு மேலும் தகவல் தெரிவித்தார்.

13. தமிழ்நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டிகளின் பங்கு மிக முக்கியமானது என்பதால், அறிவிப்பு பலகையில் நிர்ணயித்த கட்டணத்திற்கு மேல் வசூலிக்க கூடாது என்கிற அறிவுரை சுற்றுலாத் துறையால் வழங்கப்பட வேண்டும் என்றும், துறை அதனை புகார் வராத வண்ணம் கண்காணிக்க வேண்டும் என்றும், குழு பரிந்துரை செய்கிறது.

VI வசதி படைத்த வர்த்தக சுற்றுலா பயணிகளுக்கு சாகச சுற்றுலா பயணம், நீர் சாகச விளையாட்டு, பொழுதுபோக்கு அம்சங்கள் ஏற்படுத்துதல்.

14. தமிழ்நாட்டில் வசதிபடைத்த வர்த்தக சுற்றுலா பயணிகளுக்கு சாகச சுற்றுலா மற்றும் நீர் சாகச சுற்றுலா தொடங்குவதற்குரிய கட்டமைப்பு வசதிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கும் அதிக முதலீடு தேவைப்படுகிறது என்றும், வசதி படைத்த சுற்றுலாப் பயணிகளுக்கிடையே சாகச சுற்றுலா அதிக வரவேற்பை பெற்றுள்ளது என்றும், வசதி படைத்த சுற்றுலாப் பயணிகள் பொழுதுபோக்கு மற்றும் சாகச சுற்றுலா ஆகிய சுற்றுலாக்களில் ஈடுபாட்டுடன் பங்கேற்பதனால், சுற்றுலாப் பயணிகளின் செலவிடும் திறன் அதிகமாக உள்ளது என கருதப்படுகிறது என்றும், தமிழ்நாடு 1000 கி.மீ நீளம் உடைய கடற்கரை பகுதியை கொண்டுள்ளது என்றும், தனியார் தொழில் முனைவோர்கள் சாகச சுற்றுலா, நீர் சாகச சுற்றுலா ஆகிய சுற்றுலா காரணிகளில் தொழில் தொடங்கும் நேர்வில் சுற்றுலாத் துறையால் சுற்றுலா சந்தைகளில் அவர்களுக்கு உரிய விளம்பரம் செய்து ஊக்குவிக்கப்படும் என்றும் துறை தெரிவித்துள்ளது.

15. மேலும், சாகச சுற்றுலா மற்றும் நீர் சாகச சுற்றுலா தொடங்குவதற்கும் (Water and Adventure Sports) கோயம்புத்தூர் மற்றும் திருமூர்த்தி அணைகட்டு பகுதியிலும், ஏலகிரி மலைப் பகுதியிலும், தொடங்குவதற்கு National Adventure Foundation, கோயம்புத்தூர் மூலம் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுள்ளன என்றும், திட்டத்தினை செயலாக்க செய்யத்தக்கமைக்கான அறிக்கை (feasibility study) தயாரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், நீர் சாகச விளையாட்டுச் சுற்றுலா துவங்குவதற்கான விதிமுறைகள் வகுக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் துறை தெரிவித்துள்ளது.

16. துறை நீர் சாகச விளையாட்டு சுற்றுலா துவங்குவதற்கான **விதிமுறைகள் வகுக்க உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.**

17. மேலும், இராமநாதபுரம் கடற்கரையில் கடல் சாகச விளையாட்டுகள் தொடங்குவதற்கான, செய்யத்தக்கமைக்கான அறிக்கை மற்றும் தேவை மதிப்பீடு ஆராய்வு அறிக்கை (Techno Economic Viability Study and Demand Assessment Study Report) ஆகியவற்றை தயாரிப்பதற்கு, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் செயல்முறை ஆணை எண்.Q2/6584/2014, நாள் 24-1-2014 அன்று M/s. ITCOT Consultancy and Services Limited, Chennai என்ற நிறுவனத்திற்கு மேற்படி அறிக்கைகளை தயாரிக்கும் பணியாணை வழங்கப்பட்டுள்ளது. அப்பணி தற்போது நடைபெற்று வருகிறது என்றும் துறை தெரிவித்துள்ளது.

18. துறை, மேற்படி நிறுவனத்திடமிருந்து அறிக்கையினை பெற்று ஆய்வு செய்து கடல்சாகச விளையாட்டுகள் தொடங்குவதற்கான ஒரு கால வரையரையினை நிர்ணயித்து அதற்கான பணிகளை தொடங்கப்பட வேண்டும் என்றும், குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்த அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

VII. இந்தியாவின் சுற்றுலா சந்தை ஒரு கண்ணோட்டம்

19. சுற்றுலாத்துறை, தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா வளங்களையும், பல்வேறு விழாக்களையும், உலக அரங்கில் சந்தைப்படுத்தியும் அதன் மூலம் சுற்றுலா பயணிகளின் வருகையினை அதிகரிப்பதற்காக, பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு சுற்றலாத்துறை சீறிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றும் துறை தெரிவித்துள்ளது.

20. மேலும், ஆண்டு தோறும் உலக அரங்கில் நடைபெறும் முக்கிய சந்தைகளான பசிபிக் பயண முகவர்கள் மாநாடு (Pacific Asia Travel Association Conference), உலக சுற்றுலா பயணச்சந்தை, லண்டன் (World Travel Market at London). பன்னாட்டு சுற்றுலா சந்தை, பெர்லின் (ITB, Berlin) ஆகிய உலக சந்தைகளில், தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொண்டு தமிழகத்தின் வானுயர்ந்த மலைத் தொடர்கள், வெள்ளிக் கம்பிகள் போன்ற நீர்வீழ்ச்சிகளும், பசும்புல் பட்டாடை அணிந்த தாவரவளம், மணற்பாங்கான கடற்கரைகள், பிரம்மாண்டமான நினைவுச் சின்னங்கள், காலத்தை வென்று நிற்கும் கோவில்கள், அற்புதமான வன உயிரினங்கள், கண்ணையும் கருத்தையும் கவரும் சிற்பங்கள், அர்த்தமுள்ள கிராம வாழ்க்கை, சித்திரம் தீட்டியது போன்ற இயற்கை வெளிகள், தொடர்ந்து கடைபிடிக்கப்படும் பாரம்பரியம், பண்பாடுகளின் கூடல், அழகியலின் உன்னதம் ஆகிய தமிழ்நாட்டின் தனிப்பெருமைகளை உலக சுற்றுலா பயண முகவர்களிடம் எடுத்து கூறப்படுவதால் தமிழகத்திற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிக்கிறது என துறை தெரிவித்துள்ளது.

VIII. "தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023"

21. "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023" ஆவணம் 22.3.2012 அன்று வெளியிடப்பட்டது. அதில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையினை தற்போது தமிழகத்திற்கு வருகைபுரியும் 36 இலட்சம் என்பதை 2023–ஆம் ஆண்டில் 150 இலட்சம் பயணிகளாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், அதனை அடையும் வகையில் வெளிநாடுகளில் நடைபெறும் சுற்றுலா பயணச் சந்தைகளில் கலந்துகொண்டு, உலகெங்கிலும் இருந்து அங்கு வருகைபுரியும் சுற்றுலா பயண முகவர்கள் (Travel Agents) , சுற்றுலா பயண அமைப்பாளர்கள்(Tour Organisers) மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கிடையே தமிழக சுற்றுலாத்தலங்களின் சிறப்பம்சங்களை எடுத்துக்கூறி, தமிழக சுற்றுலாத்தலங்கள் குறித்த சுற்றுலா கையேடுகள் மற்றும் நினைமுனை (Pendrive)வில் தகவல்கள் வழங்கப்பட்டு, அவரவர் நாட்டின் சுற்றுலாப் பயணிகளை தமிழகத்திற்கு வருகைபுரிய ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழக சுற்றுலாத்தலங்கள் குறித்து அறிந்துகொள்ள ஏதுவாக வெளிநாட்டு பத்திரிக்கைகள், ஊடகங்கள் ஆகியவற்றில் தமிழக சுற்றுலா குறித்து விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும், தமிழகத்தின் முக்கிய நகரங்களான சென்னை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சேலம், கோவை, உதகமண்டலம், கொடைக்கானல்,

இராமேஸ்வரம் ஆகிய முக்கிய நகரங்களை இணைக்கும் சிறந்த சாலைவசதி, சிறந்த இரயில் வசதி, சென்னை, மதுரை, திருச்சி ஆகிய பன்னாட்டு விமான நிலையங்கள், சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுக சேவை வசதி ஆகியவற்றை சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்களிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

22. சுற்றுலாத் தலங்களை தூய்மையாகவும், பசுமையானதாகவும் பராமரிப்பதற்கு ஏதுவாக தமிழகத்திலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் தூய்மை விழிப்புணர்வு முகாம் 2012–2013 ஆம் ஆண்டு 12 இடங்களில் (1.மாமல்லபுரம், 2.உதகமண்டலம், 3.கொடைக்கானல், 4.கன்னியாகுமரி, 5. இராமேஸ்வரம், 6.மதுரை, 7.திருச்சிராப்பள்ளி, 8.தஞ்சாவூர், 9.சிதம்பரம், 10.திருநெல்வேலி, 11.ஒகேனக்கல், 12. பழவேற்காடு) நடத்தப்பட்டது. இது போன்ற நடவடிக்கைகளால் சுற்றுலாத்தலங்களை தூய்மையாக பராமரிக்கவும், தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து நீண்டகால இலக்கினை அடைய வாய்ப்பாக அமையும் என்றும் துறை தெரிவித்துள்ளது.

IX. பிரபலமாகாத சுற்றுலா மையங்களை கண்டறிதல்

23. வளர்ச்சிக்கான நிலைபாடுகள் என்கின்ற தலைப்பின்கீழ் புகழ்வாய்ந்த சுற்றுலாத் தலங்களில் நெரிசலை குறைக்கும் வகையில் பிரபலமாகாத சுற்றுலா மையங்களை கண்டறிந்து மேம்படுத்துதல் பணியினை மேற்கொள்வதாக துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரபலமாகாத சுற்றுலா மையங்களை துறையால் எவ்வாறு கண்டறியப்படுகிறது என்றும் அதன் அடிப்படை என்னவென்றும் குழு அறிய விரும்பியது.

24. உதாரணமாக, கோடை காலத்தில் உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு போன்ற முக்கிய கோடை வாசஸ்தலங்களில் அதிக அளவில் ஏற்படும் சுற்றுலாப் பயணிகள் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, ஏனைய பிரபலமாகாத மலை வாசஸ்தலங்களான கொல்லிமலை, ஜவ்வாது மலை, கல்வராயன் மலை, டாப் ஸ்லிப் மற்றும் ஏலகிரி போன்ற இடங்கள் கண்டறியப்பட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்க தேவையான விளம்பரங்கள், அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளான அணுகு சாலை வசதி, குடிநீர் வசதி, மின் விளக்கு/உயர்கம்ப மின்விளக்கு, நடைபாதைகள் மேம்பாடு, விளம்பரப் பலகைகள், பூங்கா அமைத்தல், நிலச் சீரமைப்பு பணிகள், கழிப்பறைகள்/ குளியலறைகள் கட்டுதல், பயணிகள் ஓய்வுக் கூடம் /பயணிகள் தங்குமிடம் கட்டுதல், வாகன நிறுத்துமிடம், மாற்று திறனாளிகளுக்கான சாய்வுதள வசதிகள் போன்றவை பெரிய அளவிலான திட்டங்களை மத்திய அரசு நிதி உதவி மூலமாகவும், சிறிய அளவிலான திட்டங்களை மாநில அரசு நிதி உதவி மூலமாகவும் மேற்கொள்ள, மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் கூடிய கருத்துரு / திட்ட மதிப்பீடு பெறப்பட்டு அரசின் ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்று அவ்விடங்களில் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் துறையால் உருவாக்கப்பட்டு வருகின்றன என துறையால் தெரிவிக்கப்பட்டது.

25. மேலும், துறையின் அரசு முதன்மைச் செயலர், பிரபலமடையாத சுற்றுலா மையங்களாக மொத்தம் 32 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன என்றும், தேர்வு செய்யப்பட்டுள்ள தலங்கள் அனைத்துமே நல்ல வருவாய் ஈட்டக்கூடிய இடங்களா என ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும், முதற்கட்டமாக, 18 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளன என்றும் தெரிவித்தார். மேலும், எடுத்துக்காட்டாக, கொள்ளிடம், ஏலகிரி போன்ற இடங்களுக்கு கடந்த ஒரு வருடமாக கோடைக் காலத்தில் வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை

அதிகரித்திருக்கிறது என்றும் தெரிவித்தார். பெங்களூரு போன்ற வெளி மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

26. மேலும், தேர்வு செய்யப்பட்டுள்ள 32 சுற்றுலா இடங்கள் பட்டியல் பின்வருமாறு–

திருவள்ளூர்	–	பெரியபாளையம், புலிகாட்
வேலூர்	–	ஏலகிரி
நாகப்பட்டினம்	–	திருக்கடையூர், வேதாரண்யம், தரங்கம்பாடி
தஞ்சாவூர்	–	திருமணஞ்சேரி
புதுக்கோட்டை	–	சித்தன்னவாசல்
பெரம்பலூர்	–	புளியஞ்சோலை
சேலம்	–	தாரமங்கலம்
நாமக்கல்	–	கொல்லிமலை
தருமபுரி	–	ஒகேனக்கல்
ஈரோடு	–	பவானிகாடுதுறை
கோயம்புத்தூர்	–	வால்பாறை
தேனி	–	மேகமலை
திண்டுக்கல்	–	சிறுமலை
திருநெல்வேலி	–	திருப்புடைமருதூர்
கன்னியாகுமரி	–	திற்பரப்பு

27. ஊட்டியிலிருந்து மைசூர் செல்லும் வழியில் ஒரு புல்போட்ட குடில் உள்ளது. அது கர்நாடக அரசால் கட்டப்பட்டது என்றும், அது வெளியிலிருந்து பார்த்தால் புல் போட்டு டென்ட் அடித்த மாதிரி இருக்கும் என்றும், ஆனால், உள்ளே அனைத்து வசதிகள் கொண்டதாக இருக்கும் என்றும், தமிழ்நாட்டிலும் அந்தமாதிரி சுற்றுலாத் துறை குடில்கள் அமைத்தால் மக்கள் விரும்பி பயன்படுத்துவார்கள் என்றும், ஏலகிரியிலும் அதுபோன்ற சில இடங்களில் அம்மாதிரி குடில்கள் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என குழு கருதியது.

28. அதற்கு, சுற்றுலாத் துறையின் ஆணையர் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி ஒதுக்கீட்டிலிருந்து அமைத்துதர வாய்ப்புள்ளதாகத் தெரிவித்தார்.

29. ஏலகிரியில் பெரும்பாலும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் காலையில் வந்து மாலையில் திரும்பி விடுகிறார்கள் என்றும், புதுமணத் தம்பதியர் சிலர் மட்டுமே அங்கு தங்குவது வழக்கம் என துறையின் முதன்மைச் செயலர், குழுவிற்குத் தெரிவித்தார்.

30. ஆசிய வளர்ச்சி வங்கியின் மூலம், சுற்றுலா ஆணையர் தெரிவித்ததுபோல், ஏலகிரி போன்ற மலைப் பகுதிகளில் அனைத்து வசதிகள் கூடிய இயற்கையான பொருட்கள் கொண்ட கூறையும் உள்ளே அனைத்து வசதிகள் கூடிய குடில்கள் அமைப்பை உருவாக்கினால், சுற்றுலாப் பயணிகளுக்கு நல்ல வசதியாக இருக்கும் என்பதால், அதனை துறை தீவிரமாக பரீசிலித்து நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

X. சுற்றுலா வழிகாட்டிகளுக்கு துறையால் வழங்கக்கூடிய பயிற்சி

31. சுற்றுலாத் துறை இதர துறைகளுடன் இணைந்து துறையால் வழங்கப்படும் பயிற்சி குறித்து விரிவாக குழு அறிய விரும்பியது.

32. சுற்றுலாத் துறை, அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம், சென்னை மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து சுற்றுலா வழிகாட்டி பயிற்சி 2006–2007, (ம) 2007–08, 2008–09 (ம) 2009–10 மற்றும் 2010–2011 ஆகிய ஆண்டுகளில் அளிக்கப்பட்டது.

சுற்றுலா வழிகாட்டிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்ட விபரம் பின்வருமாறு

வரிசை எண்	ஆண்டு	பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை
1	2006–2007(ம) 2007 – 2008	133
2	2008–2009(ம) 2009–2010	133
3	2010 – 2011	28
	மொத்தம்	294 நபர்கள்

33. மேலும் திருச்சி, துவாக்குடியிலுள்ள மாநில உணவக மேலாண்மை பயிற்சி நிறுவனமும், இணைந்து சுற்றுலா வழிகாட்டி பயிற்சி 2011–12 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு–

வரிசை எண்	ஆண்டு	பயிற்சி பெற்ற நபர்களின் எண்ணிக்கை
1	2011– 2012	27 நபர்கள்

34. இவ்வழிகாட்டி பயிற்சியினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா வழிகாட்டிகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு சுற்றுலா பயணிகளுக்கு சுற்றுலா தலங்கள் குறித்து தெளிவான விபரங்கள் வழங்கப்படுவதுடன், பிற சுற்றுலா சேவைகளான வாடகை ஊர்தி வசதி, இரயில், விமான முன்பயண வசதி குறித்த தகவல்கள், சுற்றுலா கைவினை பொருட்கள் குறித்த விபரங்கள் கிடைக்க வழிவகுக்கின்றன. இதனால் சுற்றுலா பயணிகள் மன நிறைவாக செல்கின்றனர். தரமான தகவல்களை அளிப்பதனால் சுற்றுலா பயணிகளிடையே மிகுந்த வரவேற்பும் சுற்றுலா தொழில் பெருகவும் வழிவகை செய்கிறது. வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், வருவாய், அந்நிய செலவாணி ஈட்டுதல், மண்டலவாரியான வளர்ச்சி ஆகிய பொருளாதார மேம்பாடுகளுக்கு சுற்றுலாத்துறை வழிவகுப்பதால், அதன் வளர்ச்சி ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் உந்து சக்தியாகவும் விளங்குகிறது என்றும் துறை தெரிவித்துள்ளது.

XI . சுற்றுலாத் தலங்களில் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை தடை செய்தல்

35. தமிழ்நாட்டில் சுற்றுலா தலங்களில் பிளாஸ்டிக் பயன்பாட்டை தடை செய்யப்பட வேண்டும் என்றும், தடைசெய்ய துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும் குழு அறிய விரும்பியது.

36. பிளாஸ்டிக் பொருட்களை உபயோகிப்பதால் மாசு ஏற்படுகிறது. இதனால் 2012–ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் வழிகாட்டுதலின்படி, சுற்றுலா இடங்களாகிய காஞ்சிபுரம், மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், மாங்காடு, குன்றத்தூர், உத்திரமேரூர், வண்டலூர், ஸ்ரீபெரும்புதூர், திருப்போரூர், வேடந்தாங்கல், வல்லக்கோட்டை, சிதம்பரம், பிச்சாவரம், நாகூர், வேளாங்கன்னி, பூம்புகார், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், திருவண்ணாமலை, செஞ்சி, சாத்தனூர், மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, சேலம், தேனி, திண்டுக்கல், திருச்செந்தூர், வேலூர், திருவள்ளூர், ஏலகிரி, உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, பழனி, இராமேஸ்வரம் போன்ற பல இடங்களில் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகிப்பதை தவிர்க்கும் வகையில் விழிப்புணர்வு முகாம் மற்றும் ஊர்வலம், பிரச்சாரம் செய்யப்பட்டது. மேலும், மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவின்படி உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக பிளாஸ்டிக் தடைசெய்யப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகப்படுத்தியதால் கடைகாரர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

37. 2012–2013ம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்காவூர், சிதம்பரம், திருநெல்வேலி, ஒகேனக்கல், பழவேற்காடு போன்ற 12 சுற்றுலா தலங்களில் தூய்மை விழிப்புணர்வு ஊர்வலம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஒவ்வொரு இடத்திற்கும் ரூ.1 இலட்சம் வீதம் ரூ.12 இலட்சம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டன என்றும், மேலும் சுற்றுலா தலங்களில் குப்பைகளை சேகரிக்க அலங்கார குப்பை தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் , அதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் 2013–2014 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் ரூபாய் 10 இலட்சம் செலவில் தூய்மையை மையமாக வைத்து பிரச்சாரம் ஒன்றை அறிவித்துள்ளார் என்றும், இந்தத் தூய்மை விழிப்புணர்வு முகாம் காஞ்சிபுரம், தாராசுரம், திருச்செந்தூர், திருவண்ணாமலை, குற்றாலம், பழனி, இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம், மேல்மலையனூர், பெரியபாளையம் ஆகிய இடங்களில் பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் மத்தியிலும், கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கொண்டு நடத்திக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

38. மேலும், குற்றாலத்திற்கு தினசரி இலட்சக்கணக்கான மக்கள் வருகிறார்கள் என்றும், அவர்கள் பயன்படுத்தும் ஷாம்பு, சோப்பு போன்றவற்றிலுள்ள பிளாஸ்டிக் கழிவுகள் தண்ணீரில் கலப்பதால் தண்ணீர் மாசுபடுகிறது என்றும், அதற்குப் பதிலாக பேப்பர் பாக்கெட்டில் சீயக்காய் அல்லது ஆயுர்வேத மருத்துவ சோப்பு கொடுத்தால் மக்களுக்கு உபயோகமாக இருக்கும் என்றும், சுற்றுச்சூழலும் மாசுபடாமல் பாதுகாக்கலாம் என்றும் குழு தனது கருத்தினை தெரிவித்தது.

39. அதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலர், சீயக்காய் பயன்படுத்துவது தான் உடம்புக்கு நல்லது என்றும், ரசாயனம் கலந்த சோப்பு பயன்படுத்துவதால் உடம்புக்குக் கெடுதல் என்றும், அதனால் சீயக்காய் பயன்படுத்துவதற்கு நாம் விளம்பரங்களை செய்யலாம் எனவும் தெரிவித்தார்.

40. குற்றாலம், போன்ற அருவிகள் இருக்கின்ற இடங்களில் பொது மக்களுக்கு பிளாஸ்டிக் கைப்பை (carry bag) பயன்படுத்தக்கூடாது என்று அறிவுறுத்துகின்ற வகையில் சுற்றுலாத் துறை மூலம் ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும், குற்றாலம் போன்ற அருவிகள் இருக்கின்ற இடங்களில் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக்கூடாது என்று சுற்றுலாப்

பயணிகளுக்கு அறிவுறுத்துவதோடு, மீறினால் தண்டிக்கப்படுவார்கள் என்றும் எச்சரிக்கை செய்யப்பட வேண்டும் என்கிற கருத்தினை குழு தெரிவித்தது.

41. அதற்கு துறையின் முதன்மைச் செயலர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக விளம்பரப்படுத்தலாம் என குழுவிற்குத் தெரிவித்தார்.

42. தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களையும் பிளாஸ்டிக் பயன்பாடு இல்லா பகுதியாக (plastic free zone) மாற்ற கட்டாயப்படுத்த வேண்டும் என்றும், வனத் துறையின் கீழ் வருகின்ற சுற்றுலா தலங்கள் உள்ளிட்ட இடங்களிலும், அதேபோல் வழிபாட்டுத் தலங்களிலும் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், நகராட்சியாக இருந்தாலும் சரி அல்லது உள்ளாட்சி அமைப்பாக இருந்தாலும் சரி பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தடை செய்வது குறித்து தீர்மானம் இயற்றுவதற்கு துறையிடம் செயற்குறிப்பு ஏதாவது உள்ளதா என்பதை குழு அறிய விரும்பியது.

43. குழு, விரும்புவது plastic free எந்த அளவில் பயன்படுத்தப்படுகிறது என்பதுதான். உதாரணமாக, வனத் துறைக்குட்பட்ட இடங்களில் பிளாஸ்டிக் பயன்படுத்தப்படாமல் இருப்பதால் வன விலங்குகளை பாதுகாக்கக்கூடிய ஒரு சூழல் இருக்கிறது. குழு சுற்றாலம் பகுதியில் உள்ள குறைபாடுகள் மீது துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து துறையிடம் குழு அறிய விரும்பியது.

44. அதற்கு பொது மேலாளர் (நிதி) தற்போது, சுற்றுலாப் பயனிகளிடையே பிளாஸ்டிக் கொண்டு செல்வது குறைந்திருக்கிறது என்றும், சுற்றுலாத் தலங்களுக்கு வரும் வாகனங்களை சோதனை செய்து அவர்கள் பிளாஸ்டிக் பேக் வைத்திருந்தால் அவற்றை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், கன்னியாகுமரி, ஊட்டி போன்ற பகுதிகளில் குறைந்திருக்கிறது என்றும், இதனை அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கிறது என்பதையும் தெரிவித்தார்.

45. பொது மேலாளர் (நிதி) தெரிவித்த கருத்திற்கு தற்போதைய சூழ்நிலையில் இது மிகவும் முக்கியமானப் பிரச்சினையாகும் என்றும், இதனால் சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு அதிக அளவில் நடைபெறுகிறது என்றும், சுற்றுலாப் பயணிகளைப் பொறுத்தவரையில் அதிகமான பிளாஸ்டிக் பைகள் கொண்டு வருவதற்கு வாய்ப்புகள் அதிகம் என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்துபேசி இதற்கு நடவடிக்கை எடுக்கலாம் என்றும், சுற்றுலாத் தளங்களில் பிளாஸ்டிக் பொருட்களை தடைச் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது என்றும், குழு தனது கருத்தினை தெரிவித்தது. துறை செயலாளர் என்ற முறையில் உங்களுக்கும் முழு அதிகாரம் இருக்கிறது என்றும், அதனை செயல்படுத்த கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் குழு தனது கருத்தினை மேலும் தெரிவித்தது.

46. குழுவின் கருத்திற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்வது குறித்து குழுவும் பரிந்துரை செய்தால் துறையால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

47. தமிழ்நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத் தலங்களில் பிளாஸ்டிக் பயன்பாட்டை முழுமையாக தடை செய்ய வேண்டும் என்றும், இதனை முழுமையாக செயல்படுத்த சுற்றுலாத் துறை இதர துறைகளுடன் இணைந்து கடுமையான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்றும், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டினை தடை செய்யப்பட வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்தது.

48. துறை, சுற்றுச்சூழல் நலனை கருத்தில் கொண்டு ஷாம்பு, சோப் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை தடுக்கும் வகையில் உரிய நடவடிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XII சுற்றுலா தலங்கள் குறித்த விவரங்களை விளம்பரப்படுத்துதல்

49. சுற்றுலா பயணி இங்குள்ள சுற்றுலா வளங்களை உணரும் வகையில் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் விளம்பரப்படுத்துதல் மற்றும் இணையதளத்தில் கால அட்டவணை மற்றும் கட்டண விவரங்களை வெளியிடுதல் குறித்து துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்புகிறது.

50. தமிழ்நாட்டில் பலதரப்பட்ட கண்கவரும் சுற்றுலா மகிழ்விடங்கள் உள்ளன. அவை வழிபாட்டிடங்கள், ஆன்மீகத்தலங்கள், கடற்கரைகள், மலைவாழ் இடங்கள், அருவிகள், வனவிலங்குகள், கலை, பண்பாடு, கட்டிடக்கலை, கைவினைப் பொருட்கள், தொன்மைத் தலங்கள், வரலாற்றுச் சின்னங்கள் ஆகியனவாகும். இவ்வளங்களை உணரும் வகையில் சுற்றுலாவை மேம்படுத்த தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் பத்திரிக்கைகள் மற்றும் மின்னனு ஊடக வழி பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதுமையான அணுகுமுறையில் விளம்பரப்படுத்துவதால் சுற்றுலாப் பயணிகளிடையே வரவேற்கத்தக்க தாக்கத்தை உண்டாக்கி வருகிறது.

51. பன்னாட்டு வினமானப் பயணங்களில் வழங்கப்படும் பத்திரிகைகளான ஹைலைப் (பிரிட்டிஷ் ஏர்வேஸ்) கோயிஸ் பிளேசஸ் (மலேசியன் ஏர்லைன்ஸ்) சில்வர் கிரிஸ் (சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்) ஹாலந்து ஹைரால்டு (கேஎல்எம்ஏர்வேஸ்) ஜெட்விங்ஸ் இன்டர்நேஷனல் (ஜெட் ஏர்வேஸ்) பன்னாட்டுப் பத்திரிகைகளான காண்டி நாஸ்ட் டிராவலர் (இங்கிலாந்து) டுரிஸ்டிக் ஆக்சுவல் (ஜெர்மன்) லிட்டில்இந்தியா (அமெரிக்கா) ஜலான்ஜலான் (இந்தோனேசியா) போன்றவற்றிலும், பன்னாட்டு செய்தித்தாளான டுடே (சிங்கப்பூர்) வெஸ்ட் ஆஸ்திரேலியா (சிங்கப்பூர்) ஏசியன் வாய்ஸ் மற்றும் குஜராத் சமாச்சர் (லண்டன்) வீக் எண்ட் (மொரிசியஸ்) மலேசியா நண்பன், மக்கள் ஓசை (மலேசியா) போன்றவற்றிலும் தேசிய அளவில் உள்ள பத்திரிக்கைகளான டிஸ்கவர் இந்தியா, அட்பவுன்ட் இந்தியாடுடே, டிரஸல் பிளஸ், அவுட்லுக் டிராவலர், ஆசியன் டிராவலர், ஏர்போர்ட் இந்தியா கல்சுரமா போன்றவற்றிலும், விளம்பரப்படுத்தப்பட்டன. மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் இணைய தளத்தில் www.tamilnadutourism.org & www.ttdctouronline.com மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் சுற்றுலாக்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் கட்டண விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளது என துறை தெரிவித்தது.

52. சுற்றுலாத் துறைக்கு, விளம்பரம் செய்வதற்கென்று, 10 கோடி ரூபாய் அரசினால் நிதி ஒதுக்கப்படுகிறது. அந்த, நிதியினை பயன்படுத்தி துறையின் மூலம் என்னென்ன பணிகள் செய்யப்படுகிறது என்பது குறித்து குழு விவாதிக்கும் பொழுது குழு கடந்த வருடம் ஆய்வு பயணத்தின்போது, தேக்கடி பகுதிக்கு சென்றது என்றும், தேக்கடியில் கேரளா சுற்றுலா துறையின் சுற்றுலா தகவல் மையம் ஒன்று இருந்தது. அந்த சுற்றுலா அலுவலகத்திற்குள் கேரள சுற்றுலா தலம் சம்பந்தப்பட்ட பெரிய படங்கள் வைக்கப்பட்டிருந்தன. அங்கு வருகின்ற சுற்றுலா பயணிகள் அறியும்வண்ணம், அந்த அலுவலகத்திற்குள் மின்னணு திரைமூலம் என்னென்ன சுற்றுலா திட்டங்கள் உள்ளன, எங்கெங்கு சுற்றுலா பகுதிகள் உள்ளன, படகு சவாரி, யானை சவாரி மற்றும் இரவில் தங்கி வன விலங்குகளை பார்க்கும் வசதி பற்றியும், சுற்றுலா பயணி ஒருவருக்கு எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டுமென்றும், இதர வசதிகள் குறித்து காண்பிக்கப்பட்டுள்ளது. அதனை பார்வையிட்டாலே என்னென்ன சுற்றுலா திட்டங்கள் அங்கே

செயல்படுத்தப்படுகின்றன என்பது சுற்றுலாப் பயணிக்குத் தெரியவரும். அதன்படி, சுற்றுலாப் பயணிகள் தேர்ந்தெடுக்கும் பகுதிகளுக்கு, அங்குள்ள சுற்றுலா வளர்ச்சி துறைமூலம் சுற்றுலாப் பயணிகள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். அதுபோல் தமிழ்நாட்டிலும் முக்கியமான சுற்றுலா தலங்களில் சுற்றுலா அலுவலகங்கள் அமைத்து பணியாளர்களை நியமித்து, சுற்றுலாப் பயணிகளை கவரும்வண்ணம் அது மாதிரி காண்பித்தால், அதிகளவு சுற்றுலா பயணிகள் வருவதற்கும், அதிகளவு சுற்றுலா தலங்கள் உருவாகுவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என குழு கருதுகிறது. இதற்கு துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்புகிறது.

53. அதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலர், குழு தெரிவித்த கருத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கையினை மேற்கொள்வதாக குழுவிற்குத் தெரிவித்தார். மேலும், சுற்றுலாத் துறை கொள்கை விளக்க குறிப்பு 7–வது இனத்தில் தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சுற்றுலா மையங்களில் ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டில் தொடு திரை கணினி வசதி அமைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை தொடர்ந்தும், வளர்ந்து வரும் நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகளுக்கேற்ப சுற்றுலாப் பயணிகளுக்கு பயனளிக்கும் வகையில் தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான சுற்றுலா தலங்களில் உள்ள சுற்றுலா தகவல் மையங்களில் மொத்தம் 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தொடு திரை கணினி வசதி துறையால் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்தார்.

54. அரசு முதன்மைச் செயலர் அவர்களின் கருத்திற்கு குழுவசதிகள் சுற்றுலா அலுவலகத்தில் இருக்கின்றன என்றும், இருப்பினும், அம்மாதிரியான ஒரு சுற்றுலாப் பயணி தனியாக செல்லும்போது உதாரணமாக கன்னியாகுமரிக்கோ, குற்றாலத்திற்கோ, மாமல்லபுரத்திற்கோ செல்கிறார் என்றால், அங்கே நுழைவுச்சீட்டு வாங்குகின்ற இடத்திலேயே அம்மாதிரி வசதிகள் எல்லாம் செய்து தரப்படவேண்டும் என தனது கருத்தினை தெரிவித்தார்.

55. அதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் மாமல்லபுரம் சுற்றுலாத் தலத்தில் நுழைவாயிலில் அம்மாதிரி வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

56. அதற்கு குழு, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களிலும் தகவல் அலுவலகம் மிகவும் பிரபலமான இடத்தில் வைத்து இருக்க வேண்டும் என்றும், (digital display board) வழிகாட்டிகளை நியமித்து சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள் உள்ளனவா என்பதை விளக்கினால் அவர்கள் தாமாகவே அறிந்து கொள்ள வசதியாக இருக்கும் என குழு கருதியது.

57. அதற்கு துறையின் கூடுதல் இயக்குநர் குழுவின் அறிவுரையின்படி அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் (digital display board) வைப்பதற்கான நடவடிக்கையினை துறையால் மேற்கொள்ளப்படும் என குழுவிற்குத் தெரிவித்தார்.

58. சுற்றுலாத் துறையினை மேம்படுத்தும் நோக்கத்தோடும், சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையிலும் அனைத்து சுற்றுலாத் தலங்களிலும், பிரதான பகுதியில் துறையின் தகவல் மையம் அமைத்து அதில் தமிழ்நாடு முழுவதும் பொதுவாகவுள்ள சுற்றுலாத் தலங்கள், அந்த தகவல் மையம் அமைந்துள்ள மாவட்டத்திலுள்ள இதர சுற்றுலாத் தலங்கள் பற்றி தெரிந்து கொள்ளவும், மற்றும் சுற்றுலாத் தலங்களுக்கு செல்லும் வழி, பயணிக்க வேண்டிய தூரம், தங்கும் வசதி

மற்றும் இதர வசதிகள் குறித்த விவரங்களை மின்னணு தகவல் பலகையை (Electronic Digital Display Board) அமைக்க வேண்டுமென்றும், அந்த மையத்திற்கு துறையின் பணியாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XIII மருத்துவ சுற்றுலா மற்றும் நலம் பேணும் சுற்றுலா

59. தமிழ்நாடு, ஒரு முக்கிய மருத்துவ சுற்றுலாத் தலமாக திகழ்கிறது என்றும், ஆங்கில மருத்துவம், சித்த மருத்துவம் மற்றும் ஆயுர்வேத மருத்துவம் ஆகியவற்றிற்கு தரமான வசதிகளை உள்ளடக்கி மருத்துவ சுற்றுலாவை மேம்படுத்தப்படும் என துறை தெரிவித்ததை குறித்து குழு அறிய விரும்புகிறது.

60. அதற்கு துறை, ஆங்கில மருத்துவம், சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், ஹோமியோபதி மற்றும் யோகா ஆகிய மருத்துவப் பிரிவுகளை உள்ளடக்கிய மருத்துவமனைகளை கொண்டு மருத்துவச் சுற்றுலாவையும் மற்றும் நலவாழ்வு சுற்றுலாவையும் ஒருங்கிணைத்து குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும், அப்பல்லோ மருத்துவமனை, இராமசந்திரா மருத்துவமனை மற்றும் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் உள்ள முக்கிய மருத்துவமனைகள் பல்வேறு வகையான நோய்களுக்கு நவீன சிகிச்சை அளிக்கப்படுகின்றன என்றும், மருத்துவ விசா (Medical Visa) வெளிநாட்டு பயணிகளுக்கு வழங்கப்படுகிறது என்றும் தெரிவித்தது.

61. முக்கிய மருத்துவமனைகள், பயண முகவர்கள், விமான நிலைய அலுவலர்கள், குடியுரிமை அலுவலர்கள் (Immigration Officers) ஆகியவர்களை கொண்டு மருத்துவ நுழைவிசைவு (Medical Visa) ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் வெளிநாட்டிலிருந்து மருத்துவ சிகிச்சைக்காக இந்தியாவிற்கு வருகை புரியும் நோயாளிகளுக்கு விமான நிலையத்தில் துரித சேவை வழி மூலம் அவர்களை மருத்துவ ஊர்திக்கு (Ambulance) அழைத்துச் செல்ல ஒருங்கிணைப்பு செய்யப்பட்டுள்ளது என்றும். மருத்துவ நுழைவிசைவு (Medical Visa) பெறுபவர்களுக்கு இந்தியாவில் தங்கும் கால அளவு ஒரு வருடமாக நீட்டிக்கப்பட்டது என்றும், நோயாளியின் துணைக்கு இரண்டு நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், இச்சேவை மூலம் வருகை புரியும் நோயாளிகள் மற்றும் நோயாளிகளுடன் துணைக்கு வருபவர்களால் பல்வேறு சுற்றுலா காரணிகளான விடுதிகளில் தங்குதல், வாடகை கார் சேவை, கலை பொருட்கள் வாங்குவது மற்றும் சுற்றுலா சேவைகள் உபயோகப்படுத்துதல் மூலம் மறைமுக வருவாய் ஈட்ட வாய்ப்பாக அமைகிறது என துறை தெரிவித்தது.

62. சுற்றுலாத் துறைக்கு நேரடி வருவாய் இல்லாதபோதிலும், மருத்துவ சுற்றுலாவின் மூலம் மனித சமுதாயத்திற்கு சுற்றுலாத் துறை மிக முக்கியமான பங்கு வகிப்பதால் குழு தனது பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறது.

XIV புதிய சுற்றுலாக் கொள்கை

63. "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 "–ன் கீழ் புதிய சுற்றுலா கொள்கை வகுக்கப்பட்டு வருகிறது என்று துறையால் தெரிவித்தது குறித்து குழு அறிய விரும்பியது.

64. சுற்றுலாத் துறை பல்வேறு துறைகளின் ஒப்புதலுடன் புதிய வரைவு சுற்றுலா கொள்கை தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்காக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அது அரசின் பரிசீலனையில் உள்ளது என துறை தெரிவித்துள்ளது.

65. துறை புதிய சுற்றுலா கொள்கையினை விரைவில் பரிசீலனை செய்து ஒப்புதல் அளித்து அதனை வெளியிட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. ஒப்புதலுக்குப்பின், இதன் பிரதி ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XV. மாநில அரசு நிதி உதவி திட்டங்கள்

66. 2011–2012 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதி உதவி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலையினையும் குழு அறிய விரும்புகிறது.

67. ரூ.43.60 லட்சம் மதிப்பீட்டில் ஸ்ரீவாஞ்சியம், அருள்மிகு சிவன் கோவில் பகுதியில், கூட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் பணிகள் மேற்கொள்ள தேர்வு செய்த இடம் மாற்றம் செய்யப்பட்டதை குழு அறிந்தது.

68. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொது மேலாளர் (நிதி) முதலில் தேர்வு செய்த இடம் அறக்கட்டளைக்குச் சொந்தமான இடம் என்பதால் அந்த நிலத்திற்கான விலையினை தீர்வு செய்யுமாறு தெரிவித்த காரணத்தால் காலதாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். அதற்கு குழு தலைவர் அவர்கள் சுற்றுலாத் துறைக்கும் அறநிலையங்கள் துறைக்கும் ஏதேனும் ஒருங்கிணைப்பு உள்ளதா என்று கேட்டபோது, துறையின் அரசு முதன்மைச் செயலாளர், தற்போது இரண்டு துறைகளுக்கும் அவர் துறைச் செயலாளர் என்றும், முன்பு இரண்டு துறைகளுக்கும் தனித் தனியாக செயலாளர்கள் இருந்தனர் என்றும், இரண்டு துறைகளும் தனித் தனியாக இருந்தபோது சில பணிகளில் காலதாமதம் இருந்தன என்றும், தற்போது இந்த இரு துறைகளின் பணிகளில் காலதாமதம் அதிகம் ஏற்படுவதில்லை என்றும் மற்ற துறைகளில்தான் பிரச்சினைகள் ஏற்படுகிறது என்றும், உதாரணமாக, 2012 ஆம் ஆண்டு, வேளாண்மைத் துறை இடத்தைத் தேர்வு செய்து, பயணியர் விடுதி கட்ட வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டபின்பு, அத்துறையின் பண்ணை விடுதி கட்டுவதற்கு அந்த இடம் தேவைப்படுவதாக சொல்லிவிட்டார்கள் எனவும் தாம் சுற்றுலாத் துறைக்கு பொறுப்பேற்றபின்பு அதுகுறித்து தலைமைச் செயலாளர் தலைமையில் நடந்த கூட்டத்தில் வேளாண்மைத் துறைச் செயலாளரும், தாமும் விவாதித்தபின்பு அந்த இடத்தை பயணியர் விடுதி கட்டித் தருவதாக வேளாண்மைத் துறையின் செயலர் ஒத்துக்கொண்டார்கள் என்றும் தெரிவித்தார். தற்போது அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நிலமாற்றம் காரணத்தால் ஒரு வருடம் காலதாமதமாகிவிட்டதாகவும் தெரிவித்தார்.

69. மாநில அரசின் நிதி ஒதுக்கீடு செய்த பின் மேற்படி பணியினை துறை மேலும் காலம் தாழ்த்தாமல் மேற்கொள்ள வேண்டிய பணியினை விரைவில் துவங்கப்பட்டு முடிக்கப் பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

70. ரூ.49.57 லட்சம் மதிப்பீட்டில், 2011–2012 ஆம் ஆண்டு திருச்சுழி ஸ்ரீரமண மகரிஷி பிறந்த இடத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள மாவட்ட நிர்வாக பங்கான ரூ.24.785 லட்சம் விடுவிக்காத காரணத்தால் அப்பணிகள் ரத்து செய்யப்பட்டன என துறை தெரிவித்துள்ளது. இத்தலத்தில் சரிபங்கு சுற்றுலாத் துறையினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப் பெற்றது என்று துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளதை குழு அறிந்தது. இதில் மாவட்ட

நிர்வாக பங்கு கொண்டு செயல்படுத்த வேண்டிய மிக முக்கியமான பணிகளை சுமார் இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் ரத்து செய்யப்பட்டதை அறிந்து குழு வியப்படைந்தது.

71. மாவட்ட பங்கு விடுவிக்காத காரணத்தால் சுற்றுலா பயணிகளுக்கு செய்து கொடுக்க வேண்டிய சாலை வசதி மற்றும் இருபாலருக்கும் குளியலறை வசதி மற்றும் பெண்களுக்கான கழிப்பிட வசதி ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் ரத்து செய்யப்பட்டன என துறை தெரிவித்த தகவல் குழுவால் ஏற்றத்தக்க வகையில் இல்லை என குழு தெரிவித்தது.

72. துறை மேற்கொள்ள வேண்டிய பணி மிக முக்கியமானது என்பதால் மாவட்ட நிர்வாகத்தின் பங்கினை வருகிற நிதி ஆண்டில் ஒதுக்கீடு செய்து துறை நிர்ணயித்த பணிகளை முடிக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

73. ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில், 2011–2012 ஆம் நிதியாண்டில் இருக்கன்குடி அருள்மிகு மாரியம்மன் கோயில் மற்றும் திருத்தங்கள் அருள்மிகு நின்ற நாராயண பெருமாள் கோயில் ஆகியவற்றில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் குறித்து குழு அறிய விரும்பியது.

74. அதற்கு, துறை பக்தர்களுக்கு இளைப்பாறும் கூரை கட்டுதல், கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றை சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்குப் பதிலாக மாவட்ட நிர்வாகம் மூலம் பணிகளை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், பணிகள் துவங்கப்படவுள்ளன என்றும் துறை தெரிவித்துள்ளது.

75. துறை தெரிவித்ததுபோல் பணிகளை விரைவில் துவங்கப்பட்டு குறித்த காலத்திற்குள் பணிகளை முடிக்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

76. ரூ.38 லட்சம் மதிப்பீட்டில், 2011–2012 ஆம் நிதி ஆண்டில் மணமேல்குடி கிராமம் கோடியக்கரை கடற்கரை பகுதியில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் பணிகளின் நிலை குறித்து குழு அறிய விரும்பியது.

77. அதற்கு, துறை மொத்தம் மூன்று பணிகளில் இரண்டு பணிகள் நடைபெறுவதாகவும், குழந்தைகள் பூங்கா அமைக்கும் பணிக்கு திருத்திய திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

78. 2011–2012 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்கீட்டிலிருந்து துவங்கப்பட்ட பணி என்பதால் அதனை மேலும் காலம் தாழ்த்தாமல் திருத்திய மதிப்பீட்டில் பணிகளை முடிக்கப் பெற்று பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

79. ரூ.120 லட்சம் மதிப்பீட்டில், 2011–2012 ஆம் நிதி ஆண்டு, திருக்கடையூரில் சுற்றுலா விடுதி கட்டுதல் பணி குறித்து குழு அறிய விரும்பியது.

80. அதற்கு, துறை சுற்றுலா விடுதி கட்டுவதற்காக தடையின்மை சான்று வேளாண்மைத் துறை, இயக்குநரால் அளிக்கப்பட்டுள்ளது என்றும், இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள இடம் சுற்றுலாத் துறைக்கு நிலமாற்றம் செய்வதற்காக நில நிர்வாகத் துறையின் ஆணையர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது என்றும் துறை தெரிவித்துள்ளது.

81. 2011–2012 ஆம் ஆண்டு, மேற்படி திட்டத்திற்கான நிருவாக ஒப்புதல் அரசாணை வெளியிடப்பட்டதால் துறை தேர்வு செய்யப்பட்டுள்ள இத்திட்டத்திற்கான இடம் மாற்றம் குறித்த ஆணையினை பெற்று பணிகளை விரைவில் துவங்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. துறையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினை அறிக்கையாக குழுவிற்கு அனுப்பி வைக்குமாறும் குழு பரிந்துரை செய்கிறது,.

82. ரூ.58 லட்சம் மதிப்பீட்டில் 2011–2012 ஆம் நிதி ஆண்டு வடுவூர் அருள்மிகு கோதண்டராம சுவாமி கோவிலில் ஒய்வு அறை கட்டுதல் பணி குறித்து குழு அறிய விரும்பியது.

83. அரசாணையின்படி மொத்தம் ரூ.58.00 இலட்சத்திற்கு (சட்டமன்ற உறுப்பினர் நிதி ரூ.14.50 இலட்சம், இந்துசமய அறநிலையத்துறை பங்கு ரூ.29.00 இலட்சம்) நிர்வாக அனுமதி வழங்கி ஒப்புதல் அளித்துள்ளது என்றும், சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் இந்துசமய அறநிலையத்துறையின் பங்கு விடுவித்த பின்னரே சுற்றுலாத் துறையின் பங்கான ரூ.14.50 இலட்சத்தினை விடுவிக்கப்பட வேண்டும் என அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

84. எனினும், திருவாரூர் மாவட்ட ஆட்சியர் மாவட்ட நிருவாகத்தின் நிதி பங்கினை விடுவிக்க இயலாத காரணத்தினால் முழு தொகையினையும் சுற்றுலாத் துறை மூலம் விடுவிக்குமாறு கோரி, அதன் விபரத்தினை அரசுக்கு தெரிவித்தார் என்றும், அரசு ஒய்வு அறை கட்டுவதற்கு பதிலாக ரூ.14.50 இலட்சத்திற்கு மட்டும் இக்கோவிலுக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு பயன்படும் வகையில் அடிப்படை வசதி ஏற்படுத்துவதற்கான மாற்று கருத்துரு அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளது. அரசு கோரியவாறு ரூ.14.50 இலட்சத்திற்கான புதிய கருத்துரு அனுப்பி வைக்குமாறு திருவாரூர் மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

85. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து புதிய கருத்துருவினைப் பெற்று துறை ஒப்புதல் அளித்து பணிகள் துவங்கப் பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

86. ரூ.310.00 லட்சம் மதிப்பீட்டில், 2012–2013 ஆம் நிதி ஆண்டு ஸ்ரீரங்கம் முக்கொம்பில் உள்ள பூங்கா மேம்பாடு பணிகள் குறித்து குழு அறிய விரும்பியது.

87. அதற்கு துறை மேற்படி திட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய மொத்தம் 17 பணிகள் என்றும், அதில் 7 பணிகள் மட்டும் நடைபெறுவதாகவும் 10 பணிகள் துவங்கப்பட்டுள்ளன என தெரிவித்தது.

88. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாநில மற்றும் மத்திய அரசின் நிதியுதவி துறைக்கு கிடைக்கிறது. மத்திய அரசின் நிதியாக இருந்தாலும், மாநில அரசின் நிதியாக இருந்தாலும், அந்தந்த வருடங்களுக்கு வரக்கூடிய நிதியாதாரங்களைக் கொண்டு அரசு பணி ஒப்பளிப்பு ஆணை வெளியிடுகிறார்கள் என்றும், 2012 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட குறிப்பிட்ட ஓர் அரசாணையை செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது. 1.11.2012 ஆம் நாளிட்ட சுற்றுலா(ம) பண்பாட்டுத் துறையின் அரசாணை எண் 220 ன்படி மொத்தம் 17 பணிகளுக்காக 3 கோடியே 10 இலட்சம் ரூபாய் சுற்றுலாத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 7 பணிகள் மட்டுமே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றும், மீதமுள்ள பணிகள் துவங்கப்படவில்லை என்றும் தெரிவித்தது. பணிகளின் காலதாமதம் குறித்து குழு அறிய விரும்புகிறது.

89. அதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலர், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள முக்கொம்பு–ஐ பொறுத்தவரையில், தாமே நேரிடையாகச் சென்று பார்வையிட்டதாகவும், உள்ளூர் பிரச்சனை காரணமாக பணிகள் நடைபெறுவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்றும், மொத்தம் உள்ள 17 பணிகளில் பெரும்பாலான பணிகள் முடிந்துவிட்டன என்றும், சில பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

90. மேலும் முதன்மைச் செயலாளர் மற்றும் சுற்றுலா துறை ஆணையர் குறிப்பிட்ட 17 பணிகளில் பெரும்பாலும் பெரிய தொகையாக உள்ள பணிகள் துவங்கப்பட்டுவிட்டன என்றும், சிறிய பணிகள் பொதுப்பணித் துறை மூலமாக ஒப்பந்தம் அளித்து நடைபெற்று வருகின்றன என்றும், பெரும்பாலும் பெரிய பணிகள் அனைத்தும் முடிவுறும் தருவாயில் உள்ளன என்றும், உதாரணத்திற்கு, சிறுவர் இரயிலுக்கான இரும்பு பாதை அமைக்கும் பணி ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது என்றும், ரூ.73.343 இலட்சம் மதிப்பீட்டில், பூங்கா பகுதியில் நடைபாதை அமைக்கும் பணியில் சுற்றுச் சுவர் மற்றும் மண் நிரப்புதல் பணி முடிவுற்று, பேவர் பிளாக் அமைக்கப்படவேண்டும். மேலும், ரூ.73 இலட்சம் மதிப்பீட்டில் நடனமாடும் நீரூற்று அமைக்கும் பணி முடிவுற்றிருக்கிறது. தண்ணீர் மற்றும் மின் இணைப்பு கொடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார்.

91. துறையின் அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் சுற்றுலா துறை ஆணையரின் கருத்துக்கு குழு பெரிய தொகை மதிப்பீட்டில் செய்யப்படும் பணிகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதாகவும், குப்பைத் தொட்டி, டிராலி, விளக்குக் கம்பம், அலங்கார விளக்குகள் உள்ளிட்ட சிறு, சிறு பணிகள் அரசாணை பிறப்பிக்கப்பட்டு ஓராண்டு கழித்த நிலையிலும் இன்னும் தொடங்கப்படாமல் உள்ளது என்றும், சுற்றுலாத் துறைக்காக இந்த ஆண்டு தமிழக அரசு ரூ.170 கோடி அளவிற்கும், கடந்த நிதியாண்டில் ரூ.136 கோடி அளவிற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்காக, 2012–2013 ஆம் நிதி ஆண்டில், சுமார் ரூ.3 கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அந்தந்த ஆண்டுகளில் ஒதுக்கப்படும் நிதியினை அந்தந்த ஆண்டுகளிலேயே செலவு செய்து பணிகளை குறித்த காலத்திற்குள் முடிப்பதற்கு துறை முனைப்பு காட்டவேண்டும் என்று குழு தனது கருத்தினை தெரிவித்தது.

92. மேலும், மத்திய அரசு மூலம் ஒதுக்கப்படும் நிதியானாலும், உலக வங்கிமூலம் ஒதுக்கப்படும் நிதியானாலும், அரசாணை வெளியிட்ட பிறகு, பணிகளைக் காலதாமதம் ஏற்படாமல் முடிப்பதற்கு துறை கவனம் செலுத்தவேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது.

93. ரூ.310 இலட்ச மதிப்பீட்டில் ஸ்ரீரங்கம் முக்கொம்பில் உள்ள பூங்கா மேம்பாடு பணிக்கான நிருவாக ஒப்புதல் அரசாணை வழங்கப்பட்டு ஓராண்டு கடந்த நிலையிலும் மிகவும் தாமதமாகவே மேற்கொள்வதாக குழு கருதுகிறது. எனவே, துறை இனிமேலும் காலதாமதம் செய்யாமல் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் அனைத்துப் பணிகளையும் முடிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

94. பொதுவாக, தமிழ்நாடு முழுவதும் மத்திய/மாநில அரசுகளினால் சுற்றுலாத் துறைக்கு வழங்கப்படும் நிதியினைக் கொண்டு இதர துறைகளினால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பணிகளை விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்றும், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதிக்கு அப்பணிகளை முடிக்கப்பெற்றவுடன் அதற்கான பயனீட்டுச்சான்று (Utilisation

Certificate) மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

95. ரூ.31 இலட்சம் மதிப்பீட்டில் 2012–2013 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம் நயினார் கோவில் பகுதியில் சுற்றுலா அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது குறித்த பணிகளின் தற்போது நிலையினை குழு அறிய விரும்பியது.

96. குழு கோரியதற்கு துறை அனைத்து பணிகளுமே துவங்கப்படவுள்ளன என தெரிவித்தது.

97. பொதுமக்கள் பயன்பெறும் வகையில், 2012 ஆம் ஆண்டில், நிருவாக ஒப்புதல் அளித்து, மிக எளிதில் மேற்கொள்ள வேண்டிய பணிகளில் இதுவரையில் துவங்கப்படாததற்கு குழு தனது வருத்தத்தினை தெரிவித்துக் கொள்கிறது. சுற்றுலாத் துறையினால், பணிகளை செயற்படுத்தும் முகமைக்கு நிதி ஒதுக்கீடு செய்ததோடு அப்பணியினை துறையினால் கண்காணிக்கப்படவில்லை என்றே குழு கருதுகிறது.

98. எனவே, துறை மேலும் காலம் தாழ்த்தாமல் மேற்படி பணிகளை முடிக்கப்பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

99. ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில், 2012–2013 ஆம் ஆண்டில் உத்தரகோசமங்கை பகுதியில் சுற்றுலா அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் குறித்த பணிகளின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

100. பொதுமக்கள் பயன்பெறும் வகையில், மேற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பணிகளை இதுவரை துவங்கப்பெறவில்லை எனத் துறை தெரிவித்துள்ளது. காத்திருப்போர் கூடம் அமைத்தல், நவீன கழிப்பிடம் அமைத்தல் மற்றும் பிராத்தனை நடைபாதை அமைத்தல் பணி போன்ற மிக அத்தியாவசியமான விரைவில் முடிக்கப்பட வேண்டிய பணிகளை ஒரு வருடம் காலம் கழிந்த நிலையிலும் முடிக்கப் பெறாததற்கு குழு தனது வருத்தத்தினை தெரிவித்துக் கொள்கிறது.

101. எனவே, துறை செயல்படுத்தும் முகமையின் பணிகளை கண்காணித்து அவற்றை விரைவில் முடிக்கப்பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

102. ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில், 2012–2013 ஆம் ஆண்டில், விருஞ்சிபுரம் சிவன்கோவில் பகுதி சுற்றுலா அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் பணிகளின் நிலை குறித்து குழு அறிய விரும்புகிறது.

103. 2012–2013ஆம் நிதியாண்டில், நிர்வாக ஒப்புதல் அளித்தும் மேற்படி சுற்றுலாத் தலத்தில் அடிப்படை வசதிகள் துவங்கப்பட வேண்டிய பணிகளை துவங்காமல் அப்பணிக்கான ஒப்பந்தபுள்ளி பரிசீலனையில் உள்ளது என துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக ஒப்புதல் அளித்து சுமார் ஒரு வருட காலத்திற்கு மேல் கடந்த நிலையில் அப்பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளி பரிசீலனையில் உள்ளது என துறையின் கருத்தினை கண்டு குழு வியப்படைந்தது.

104. எனவே, சுற்றுலாத் துறை நிதியினை ஒதுக்கீடு செய்து விட்டுவிடாமல் செயற்படுத்தும் முகமையினால் விரைவில் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் அளித்து முகமையினால் மேற்கொள்ளப்படும் பணியினை குறித்த காலத்திற்குள் முடிக்கப்பெற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

105. ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம், கல்லாறு பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் பணியின் நிலையினை குழு அறிய விரும்பியது.

106. அதற்கு அப்பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை என குழுவிடம் துறையால் தெரிவிக்கப்பட்டது.

107. மேற்குறிப்பிட்ட பகுதிக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணிகளைகுறித்த காலத்திற்குள் முடித்து தர வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

108. ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில், 2012–2013 ஆம் ஆண்டில், சேலம் மாவட்டம் வடசென்னிமலை பகுதியில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல் பணியின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

109. அதற்கு துறை, பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை என தெரிவித்தது.

110. 2012–2013 ஆம் ஆண்டு, வடசென்னிமலை பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணிகளுக்கு சுற்றுலாத் துறையினால் நிர்வாக ஒப்புதல் அளித்தும், இதுவரை பணிகள் துவங்கப்படவில்லை என்று துறையால் தெரிவிக்கப்பட்டது. ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, ஆழ்குழாய் மற்றும் குழாய் அமைத்தல், ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் ஆண்கள்/ பெண்களுக்கான கழிப்பறை கட்டுதல் ஆகிய குறைந்த மதிப்பீடுகளில் மேற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான அடிப்படை வசதிகளுக்கான பணிகள் இதுவரை துறையால் சுமார் ஒரு வருடத்திற்கு மேலாகியும் பணிகள் துவங்கப்படவில்லை என்பதைக் கண்டு குழு வியப்படைகிறது.

111. சுற்றுலாத் துறை இனிமேலும் காலம் தாழ்த்தாமல் பணிகளை மேற்கொள்ளும் முகமையினால் பணிகளை விரைவில் துவங்கப்பட்டு முடிக்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

112. ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில், 2012–2013 ஆம் ஆண்டில், திருவண்ணாமலை மாவட்டம் தவளகீரிஸ்வரர் மலை கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணியின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

113. அதற்கு, துறை பணிகள் இன்னும் துவங்கப்படவில்லை எனத் தெரிவித்தது.

114. 2012–2013 ஆம் ஆண்டில், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில், தவளகிரிஸ்வரர் மலைகோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் பணிகளுக்கு நிர்வாக ஒப்புதல் அளித்து சுமார் ஒருவருட காலத்திற்கு மேல் காலம் கடந்த நிலையிலும், பணிகள் துவங்கப்படவில்லை என துறை அளித்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மலைக்கோயிலின் உச்சியில் பாதுகாப்பான கைப்பிடி அமைத்தல் பணியினையே துவங்கப்படவில்லை என்றால், பாதுகாப்பே கேள்விக்குறியாக அமைந்து விடுவதாகவும், கழிப்பறை வசதிகள் கூடிய காத்திருப்போர் அறை கட்டுதல் பணிக்கு செயற்படுத்தும் முகமையினால் முக்கியத்துவமே அளிக்கப்படவில்லை என்றும் சுற்றுலாத் துறையின் நிதி ஒதுக்கீடு செய்தபிறகு பணியினை மேற்பார்வையிடவும் தவறிவிட்டது எனக் குழு கருதியது.

115. பணியினை மேற்கொள்ளும் முகமை, பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலை கருத்தில் கொண்டு பணிகளை துவங்கப்பட்டு, விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்த அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

116. ரூ.137.20 இலட்சம் மதிப்பீட்டில், 2012–2013 ஆம் ஆண்டில், திருவண்ணாமலை மாவட்டம் படைவீடு ரேணுகாம்பாள் கோவில் மேம்பாடு பணிகள் குறித்து குழு அறிய விரும்பியது.

117. 137.20 இலட்சம் மதிப்பீட்டில், 2012–2013 ஆம் ஆண்டில் படைவீடு ரேணுகாம்பாள் கோவில் மேம்பாட்டு பணிக்கு நிர்வாக ஒப்புதல் அளித்து சுற்றுலாத் துறைக்கென தகவல் மையம் அமைக்கும் பணியையும், சுற்றுலா விளம்பரப் பலகை பணியையும் செயல்படுத்த முகமையினால் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்றே குழு கருதுகிறது.

118. 2012–2013 ஆம் நிதியாண்டு முடிவுற்ற நிலையில் துறை நிர்ணயித்த பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணிகளை முடிக்கப்பெற வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

119. மாவட்டந்தோறும் மாவட்ட சுற்றுலா அலுவலர்களை நியமிக்க அரசுக்கு குழு பரிந்துரை செய்ய தயாராக இருக்கிறது என்றும், எந்தெந்த இடங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகம் இருக்கிறதோ அந்த இடங்களில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்வதுதான் சுற்றுலா அலுவலர்களுடைய பணி. சுற்றுலா அலுவலர்களே அவ்வப்போது கூட்டங்களை நடத்தி, அந்தக் கூட்டத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு என்னென்ன அடிப்படை வசதிகள் தேவை என்ற விவரங்களைச் சேகரித்து, சுற்றுலாத் துறைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று குழு கருதுகிறது.

120. மாவட்டந்தோறும் சுற்றுலா அலுவலர்கள் பணியிடங்களை உருவாக்கி, சுற்றுலா தலங்களுக்குத் தேவைப்படும் உள்கட்டமைப்பை ஏற்படுத்தும் வகையில் துரித நடவடிக்கைகையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

121. கல்லணைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு என்னென்ன அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்ற விவரம் தற்பொழுது பெறப்பட்டு, அந்தந்த மாவட்ட அலுவலர்களை அவ்வப்போது, 15 நாட்களுக்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கு ஒரு முறையோ சென்னைக்கு வரவழைத்து அல்லது நீங்கள் அங்கு சென்று ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, அங்குள்ள தேவைகளைக் கண்டறிந்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என குழு கருதுகிறது.

122. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், திவான் இராமநாதபுரம் தேவஸ்தானத்திற்கு 24 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். அங்கு பணிகள் எதுவும் தொடங்கப்படவில்லையென்று சொல்லியிருக்கிறீர்கள். இதனுடைய செய்யத்தக்கமைக்கான அறிக்கையினை பெற நடவடிக்கை மேற்கொள்ளாமல் ஒதுக்கிவிட்டீர்களோ என்பதுதான் குழுவினுடைய ஆதங்கம். மாவட்ட அலுவலர்கள் மாவட்டத்தில் இம்மாதிரி பணிகளை செய்தால்தான் நன்றாக இருக்கும் என்பது குழுவின் கருத்து.

123. கல்லணையைப் பொறுத்தவரை, சுற்றுலாப் பயணிகள் பார்வையிட வேண்டிய அனைத்து இடங்களையும் இணைக்கும்விதமாக நடைபாதை அமைத்தல், கல்லணையைப்பற்றி விளக்கிச் சொல்லக்கூடிய தகவல் மையம், முதலை எங்கே இருக்கிறது, மீன் எங்கே இருக்கிறது போன்ற விவரங்களை விளக்கிச் சொல்லக்கூடிய மையங்கள், தொலைநோக்கு கருவி அமைத்தல், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பூங்கா அமைத்தல், சிறிய நீச்சல் குளம் அமைத்தல் மற்றும் குழந்தைகளுக்கான நீர் சறுக்கு விளையாட்டு அமைத்தல் போன்ற பணிகளுக்கென விரிவான அரசாணை வெளியிட்டிருக்கிறோம் என்றும், ஒப்பந்தப்புள்ளி கோரி, பணிகளை மேற்கொள்வது அனைத்தும் மாவட்ட அலுவலர்தான் செய்ய வேண்டும் என்றும், மேற்சொன்ன பணிகளுக்கென ரூ.4,08,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

124. சுற்றுலாத் துறையின் நிதியினைக் கொண்டு பணிகளை மேற்கொள்ளும் துறைகள் அதன் முன்னேற்றத்திற்கு குறித்த காலத்திற்கு அதனை முடிப்பதற்கும், தாமதமாக முடிக்கப்பெறும் பணிகளுக்கு அந்தந்த துறையே முழு பொறுப்பாகும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

125. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் நிதியினைக் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்த காலத்திற்குள் பொதுப்பணித் துறையால் முடிக்கப்பெற வேண்டும் என்றும், பணிகளை முடிக்கப்பெற்ற பின் அதற்கான பயனீட்டுச்சான்று (Utlisation Certificate) சுற்றுலாத் துறைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

126. ஆனால் பணிகளை ஆய்வு செய்வதற்கு துறைக்கு அதிகாரம் கிடையாது என்றும் , நிதி ஒதுக்கீடு மட்டும் செய்கிறது என்று தெரிவித்தார்.

127. சுற்றுலாத் துறையின் ஆணையர் அவர்களின் கருத்திற்கு அரசாங்கத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது இந்து சமய அறநிலையத் துறை அல்லது எந்தத் துறையாக இருந்தாலும், எந்த நோக்கத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்துகிறார்களா என்பது குறித்து ஆணையர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்று குழு கருதியது. சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விரைவாக பணிகளை மேற்கொள்கிறார்கள். ஒரு சிலர் மந்தமாக இருக்கிறார்கள் என்றால் அவர்களை துரிதப்படுத்தி, பணிகளை வேகமாக முடிக்க வேண்டிய பொறுப்பு துறைக்கு உண்டு என்றே குழு கருதியது.

128. சுற்றுலாத் துறையின் நிதியினைக் கொண்டு மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இதர துறைகளால் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு சுற்றுலாத் துறையின் ஆணையர் அல்லது ஆணையரால் நியமனம் செய்யும் அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவரும் இணைந்து பணியின் முன்னேற்றம் மற்றும் குறித்த காலத்திற்குள் பணிகளை முடிக்க கண்காணிக்க வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

129. கல்லணை உட்பட மூன்று சுற்றுலாத் தலங்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தும் பணிகளுக்கென ஒப்பந்தப்புள்ளி கோரியபோது மூன்றாவது முறைதான் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டது என்றும், அரசு முதன்மைச் செயலர் தெரிவித்தார்.

130. சுற்றுலாத் துறையின் மூலம் வழங்கப்படும் பல்வேறு பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்குவதில் பிரச்சினைகள் உள்ளன என்றும், அப்பணிகளுக்கு Schedule of Rates போதிய அளவு இல்லாமல் இருக்கலாம் அல்லது வேறு ஏதேனும் காரணங்கள் இருக்கலாம் என்றும், அதனை துறை அலுவலர்கள் கண்டறிந்து, அதனை களைய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு தெரிவித்தது.

131. அதற்கு, அரசு முதன்மைச் செயலர் மற்றும் சுற்றுலா ஆணையர் குழு தெரிவித்ததுபோல் துறையின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி எடுப்பதிலும், பணிகளை நிறைவேற்றுவதிலும் உள்ள பிரச்சினைகள் குறித்து ஒப்பந்ததாரர்களிடம் தெரிவித்தும், பணிகளை நிறைவேற்ற ஒப்பந்தம் வழங்கிய பின்னர், அந்த பணியின் முன்னேற்றம் குறித்து சுற்றுலாத் துறை அதிகாரிகள் ஆய்வுகளை மட்டும் மேற்கொள்ளலாம், ஆனால் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கு அதிகாரம் துறைக்கு இல்லை என்றும் குழுவிற்குத் தெரிவித்தார்.

132. குழு, ஆணையர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல ஒப்பந்தம் கொடுத்த பணிகளின் முன்னேற்றம் குறித்து அறிவதற்காக அந்த இடங்களை ஆய்வு செய்யலாம் என குழு தனது கருத்தினை தெரிவித்தது.

133. சுற்றுலாத் துறையின் நிதி ஒதுக்கீடு பெற்று இதர துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளியினை பொதுப்பணித் துறையின் விலைப்புள்ளி நிர்ணயம்படி **(Schedule of Rates)** ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும் என்றும், சுற்றுலாத் துறையிடமிருந்து நிதியினைப் பெற்ற பின்னர் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு பணிகளை துவங்கப்பட்ட பின்னர் ஏற்படும் காலதாமதத்திற்கு ஒப்பந்ததாரர் மற்றும் செயல்படுத்தும் துறையே பொறுப்பாகும் என குழு பரிந்துரை செய்கிறது.

134. சுற்றுலாத் துறை அரசின் நிதியினை ஒதுக்கீடு செய்யும்போதே அப்பணியினை குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்கிற பொறுப்பும் துறைக்கு உள்ளது என்பதால், குறித்த காலத்திற்குள் பணிகளை முடிக்கப்பெற்று பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஒப்படைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XVI -பகுதி –II திட்டங்கள்

135. 2012–2013 ஆம் ஆண்டு பகுதி –II திட்டங்களின் கீழ் நடைபெறும் பணிகளின் தற்போதைய நிலையினை மற்றும் அவற்றின் மதிப்பீடுகளுடன் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்புகிறது.

136. அதற்கு துறை 2012–2013 ஆம் ஆண்டில் பகுதி – II திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளின் தற்போதைய நிலையினை பின்வருமாறு தெரிவித்தது.

137. ரூபாய் 54.00 இலட்சம் மதிப்பீட்டில், 2012–2013 ஆம் ஆண்டு, சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா மையங்கள் புனரமைத்தல் பணிக்காக தேர்வு செய்யப்பட்ட இடங்கள், கொடைக்கானல், கன்னியாகுமாரி, இராமேஸ்வரம், திருநெல்வேலி, தஞ்சாவூர், சிதம்பரம், தருமபுரி, சேலம், பூம்புகார் ஆகிய சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி இரயில் நிலையம், **சென்னை விமான** நிலையத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முனையம், **கோயம்பேடு** புறநகர் பேருந்து நிலையம், சென்டரல் மற்றும் எழும்பூர் இரயில் நிலையங்கள், கட்டபொம்மன் நினைகோட்டை மற்றும் பாஞ்சாலங்குறிச்சி ஆகிய **சுற்றுலா** தகவல் மையங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் அதில் **12 இடங்களில்** பணிகள் முடிவுற்றன என்றும், நடைபெறும் ஒரு பணியான, **சென்னை விமான**

நிலையம் (வெளிநாட்டு முனையம்) இடம் தெரிவு செய்த பின்னர் பணிகள் துவங்கப்படும் என்றும், ஐதராபாத் சுற்றுலா தகவல் மையம், புதிய இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், புதுப்பித்தல் பணி கைவிடப்பட்டு தொகையினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற்று அரசுக் கணக்கில் செலுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், துறையால் தெரிவிக்கப்பட்டது.

138. 2012–2013 ஆம் ஆண்டு, 31.3.2013 அன்றுடன் முடிவுற்ற நிலையிலும், சென்னை விமான நிலையத்தில், சுற்றுலா மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்படவில்லை, என்று குழு அறிந்தது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆண்டும் முடிவுற்று, அதை தொடர்ந்து வந்த நிதி ஆண்டும் முடியும் தருவாயில் இடம் தேர்வு செய்யப்படாததை கண்டு குழு வியப்படைகிறது.

139. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள், தமிழ்நாட்டுக்கு வருகைதரும் மிக முக்கயமான இடமான, சென்னை விமான நிலையத்தில் தகவல் மையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்படாமலே கழகம் நிதி ஒதுக்கீடு கோரியுள்ளது என்றே குழு கருதியது.

140. சர்வதேச சுற்றுலா பயணிகள் மிக எளிதில் தமிழ்நாடு சுற்றுலா தலங்கள் குறித்த விவரங்களை தெரிந்துகொள்ளும் வாய்ப்பினை கழகத்தால் ஏற்படுத்தப்படவில்லை என்றும் குழு கருதுகிறது.

141. எனவே, மேற்படி இடத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தகவல் மையத்திற்கான நடவடிக்கையினை துறை துரிதமாக மேற்கொண்டு மையத்திற்கான இடம் தேர்வு செய்து அமைக்கப் பெற வேண்டும் என்றும், இது குறித்த அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

142. ஐதராபாத் சுற்றுலா தகவல் மையம் புதிய இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டதால் புதுப்பித்தல் பணி கைவிடப்பட்டதாகவும், புதுப்பித்தல் பணிக்கான தொகையினை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற்று அரசுக் கணக்கில் செலுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் துறையால் தெரிவிக்கப்பட்டது.

143. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஆண்டு 31.3.2013 அன்றுடன் முடிவுற்றும் அதனை தொடர்ந்து வந்த நிதி ஆண்டு முடியும் தருவாயிலும் உள்ளதால், கைவிடப்பட்ட பணிக்கான நிதியினை ஏன் அரசுக் கணக்கில் செலுத்தப்படவில்லை, என்பதை கண்டு குழு வியப்படைந்தது.

144. எனவே, துறையால் கைவிடப்பட்ட மேற்படி பணிக்கான தொகையினை அரசு கணக்கில் செலுத்தி அதற்கான முழு விவரங்களை குழுவிற்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XVII சுற்றுலா தலங்களுக்கு செல்லும் சாலைகளை மேம்படுத்துதல்

145. 2012–2013 ஆம் ஆண்டில், சுற்றுலாத் தலங்களுக்கு செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளின் தற்போதைய நிலையினை குழு அறிய விரும்பியது.

146. அதற்கு, துறை ரூ.1000 லட்சம் மதிப்பீட்டில் 2012–2013 ஆம் நிதி ஆண்டில் நெடுஞ்சாலைத் துறையினால் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளின் தற்போதைய நிலை குறித்த விவரங்களை பின்வருமாறு தெரிவித்தது.

147. 2012–2013 ஆம் நிதி ஆண்டில் ரூ.62.50 லட்சம் மதிப்பீட்டில் பிரான்மலை பகுதிக்கு சிமென்ட் சாலை அமைக்கும் பணிக்கு துறையால் நெடுஞ்சாலைத் துறைக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியினை துவங்கப்படாமல் மாற்று கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளதாக துறை அளித்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

148. நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியினை மேற்கொள்ளாமல் மாற்று கருத்துரு கோருவதற்கான காரணம் குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

149. 2012–2013 ஆம் நிதி ஆண்டில் ரூ.92.95 லட்சம் மதிப்பீட்டில் கொடைக்கானல் வட்டக்கனால் முதல் டால்பின் முனை வரையிலான சாலை மேம்பாட்டு பணியினை மேற்கொள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டது என்றும், அப்பணி துவங்கப்படவுள்ளன என துறையால் அளிக்கப்பட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறையால் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு சுமார் ஒரு வருட காலத்திற்கு மேல் கடந்தும் பணி துவங்கப்படாமல் உள்ளதற்கு குழு வியப்படைகிறது. சுற்றுலாப் பயணிகளின் வருகையினால் சுற்றுலாத் துறை மேம்பாடு அடைய சாலை வசதி மிக முக்கியமானது என அறிந்தும் அப்பணியினை ஒப்படைத்த சுற்றுலாத் துறை நெடுஞ்சாலைத் துறையினால் மேற்கொள்ளப்படுகிறதா என துறை கண்காணிக்கவில்லை என்றே குழு கருதியது.

150. எளவே, சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை உயர சாலை வசதி மிக முக்கியமானது என்பதாலும், நெடுஞ்சாலைத் துறை விரைவாக பணியினை தொடங்கப்பட வேண்டும் என்றும், துறையால் மேற்கொள்ளப்படும் சாலைப்பணியினை சுற்றுலாத் துறை கண்காணிக்க வேண்டும் எனவும் குழு பரிந்துரை செய்கிறது.

XVIII மத்திய அரசு நிதி உதவித் திட்டங்கள்

151. ரூ.459.39 இலட்சம் மதிப்பீட்டில் 2011–2012 ஆம் ஆண்டு தேனி மாவட்டம் வைகை அணையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல் குறித்து குழு அறிய விரும்பியது.

152. 2011–2012 ஆம் நிதியாண்டில் மத்திய அரசினால் நிதி ஒதுக்கீடு செய்து அப்பணிக்கான நிர்வாக ஒப்புதல் பொதுப்பணி (நீர்வள ஆதார) துறைக்கு, சுற்றுலாத் துறையின் அரசாணை எண் 127 நாள் 26.6.2012 ஆம் நாளில் வழங்கப்பட்டதாக துறையால் அளித்த தகவலில் தெரிவிக்கப்பட்டது. துறையினால் வெளியிடப்பட்ட அரசாணையில் மேற்படி பணி 13 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு அதில் 6 சிப்பங்களின் பணிகள் நடைபெற்று வருவதாகவும், 7 சிப்பங்களின் பணி துவங்கப்படவுள்ளது என்றும், மொத்தம் பணிகளில் 15 சதவீதம் முடிவுற்றது என்றும் துறை அளித்த தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

153. 2011–2012 ஆம் ஆண்டிற்கான, மத்திய அரசிடமிருந்து நிதியினைப் பெற்று பொதுப்பணித் துறைக்கு நிர்வாக ஒப்புதல் அளித்த பின்னர் ஒரு வருடத்திற்கு மேல் காலம் கடந்த நிலையில் 6 சிப்பங்களின் பணியினை துவங்கப்படவில்லை என்றும் பணி மேற்கொள்ளும் சிப்பங்களில் 15 சதவீதம் மேற்கொள்ளப்பட்டதற்கு குழு தனது வருத்தத்தினை தெரிவித்தது. ஒரு பணிக்காக, மத்திய அரசிடமிருந்து நிதியினைப் பெற்றவுடன் அதனை அந்த நோக்கத்திற்கான பணியினை குறித்த காலத்திற்குள் முடிக்கப் பெற்று அதற்கான பயனீட்டு சான்று அளிக்கப்பட வேண்டும் என்றும், அவ்வாறு பயனீட்டு சான்று அளிக்கப்பெறவில்லை என்றால் அடுத்து வேறு ஏதேனும் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது

என்கிற நிபந்தனை மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. துறை ஒரு பணிக்கான நிதி ஒதுக்கீடு பெற்ற பின் 15 சதவீதம் பணிகள் மட்டுமே முடிவுற்ற நிலையில் மத்திய அரசிடமிருந்து துறையின் இதர பணிகளுக்கு மத்திய அரசின் நிதியினை எவ்வாறு பெற முடியும் என்றே குழு கருதியது. மிக முக்கியமான சுற்றுலாத் தலத்தில் சுற்றுலாத் துறை நிதி ஒதுக்கீடு செய்த பின்னர் முகமையால் மேற்கொள்ளப்படும் பணியின் முன்னேற்றம் குறித்த நிலையினை கருத்தில் கொள்ளவில்லை என்றும், பொதுப்பணி (நீர்வள ஆதாரத்) துறை அனைத்து தொழில்நுட்ப வசதிகள் உள்ள நிலையிலும், பணிகளை மிக மந்தமான நிலையில் மேற்கொள்கிறது என்பதைக் கண்டு குழு மீண்டும் தனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறது.

154. பொதுப்பணித் துறை (நீர்வள ஆதாரத்) துறை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் அனைத்து பணிகள் முடிக்கப் பெற வேண்டும் என்றும், அத்துறையினால் மேற்கொள்ளப்படும் பணியினை சுற்றுலாத் துறை மேற்பார்வையிடம் வேண்டும் என்றும், அனைத்து பணிகள் முடிவுற்றபின் மத்திய அரசுக்கு பயனீட்டு சான்று (Utilisation Certiicate) அனுப்பி வைக்கப்பெறவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. இப்பணி முடிவுற்ற பின் விரிவான அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பிவைக்கப் பெறவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

155. 2011–2012 ஆம் நிதி ஆண்டில், ரூ.456 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய அரசு திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டம் ஜேடர்பாளையம் பகுதியில் பூங்கா மேம்பாடு பணி குறித்து குழு அறிய விரும்பியது.

156. அதற்கு துறை, 2011–2012 ஆம் நிதி ஆண்டில், மத்திய அரசு திட்டத்தின் கீழ் மேற்படி பகுதியில் பொதுப்பணித் துறையின் மூலம் பணிகளை மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டது என்றும், அப்பணியில் 10 சதவீதம் பணிகள் மட்டுமே முடிவுற்றது என்றும் துறை அளித்த தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு சுமார் ஒரு வருட காலம் கடந்த நிலையில் 10 சதவீதம் பணிகள் மட்டுமே முடிவுற்றது என துறை தெரிவித்த தகவலுக்கு குழு வியப்படைந்தது.

157. மத்திய அரசால் ஒரு திட்டத்திற்கு வழங்கும் நிதி அத்திட்டத்தினை குறித்த காலத்திற்குள் முடிக்கப்பெற வேண்டும் என்றும் அத்திட்டம் முடிவுற்ற பின் அதற்கான பயனச்சீட்டு சான்று (Utilisation Certificate) வழங்கப்பட வேண்டும் என்கிற நிபந்தனை உள்ளது என அறிந்தும் பணிகளை மேற்கொள்ளும் முகமையான பொதுப்பணித் துறை அல்லது நிருவாக ஒப்புதல் அளித்த சுற்றுலாத் துறை கருத்தில் கொள்ளவில்லை என்றே குழு கருதியது.

158. எனவே, பணியினை மேற்கொள்ளும் பொதுப்பணித் துறை மற்றும் நிர்வாக ஒப்புதல் அளித்த சுற்றுலாத் துறை மத்திய அரசு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் அனைத்து பணிகளையும் முடிக்கப் பெற்று அதற்கான பயனீட்டு சான்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

159. ரூ.408 இலட்சம் மதிப்பீட்டில் 2011–2012 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம் கல்லணை மேம்பாடு பணி குறித்து குழு அறிய விரும்பியது.

160. 2011–2012 ஆம் ஆண்டு மத்திய அரசு நிதி உதவி திட்டத்தின் கீழ், ரூ.408 இலட்சம் மதிப்பீட்டில், தஞ்சாவூர் மாவட்டம், கல்லணை மேம்பாடு, செய்வதற்கு முதல் தவணையாக ரூ.326.40 லட்சம் 3.7.2012 அன்று தஞ்சாவூர் ஆட்சித் தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்டது என்றும், துறை அளித்த தகவலில் தெரிவிக்கப்பட்டது. துறை அளித்த தகவலை பார்வையிட்ட குழு 326.40 இலட்சம்

நிதி ஒதுக்கீட்டில் ரூ.61.03 இலட்சம் மற்றும் சுமார் 2 ஆண்டுகளில் செலவு செய்யப்பட்டது என்றே குழு அறிந்தது. மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட முதல் தவணையே துறையால் முழுமையாக செலவு செய்யப்படாத நிலையில் மத்திய அரசிடமிருந்து அப்பணிக்கான மீதத் தொகையினை துறையால் எல்வாறு பெற முடியும் என்று குழு எண்ணியது.

161. **எனவே பொதுப்பணித் துறை மேற்படி திட்டத்திற்காக முழு பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், சுற்றுலாத் துறை அப்பணிகளை மேற்பார்வையிட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கான பயனீட்டு சான்று மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப் பெறவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.**

162. மத்திய அரசு சுற்றுலாத் துறைக்கு வருடந்தோறும் மூன்று அல்லது நான்கு பணிகளுக்கு நிதி ஒதுக்குகிறது என்றும், தோராயமாக 20 கோடி ரூபாய் தற்போது ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், கல்லணை, ஜோர்பாளையம், வைகை அணை மற்றும் திருவாணைக்காவல் போன்ற சுற்றுலா இடங்களை மேம்படுத்தவும், அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளவும் நிதி வழங்கப்பட்டுள்ளது என துறையின் கூடுதல் இயக்குநர் குழுவிற்குத் தெரிவித்தார். ஏற்கெனவே நடைபெறுகின்ற திட்டங்களை முடித்தால்தான் புதிய திட்டங்களுக்கு நிதி தருவதாகக் நிபந்தனை உள்ளதாக துறையின் பொதுமேலாளர் (நிதி) குழுவிற்கு தெரிவித்தார். மேலும், அரசு முதன்மை செயலர் மாநில அளவிலான சுற்றுலா கூட்டம் (Tourism Committee State Level Meeting) கூட்டவிருப்பதாகவும், நிதி ஆதாரங்களைப் பொறுத்தவரை, இந்த ஆண்டு ஒரு பணிக்காக 10 கோடி ரூபாய் நிதி கோரினால் அத்தொகையினை வழங்க 2 அல்லது 3 வருடங்கள் ஆகலாம் என்றும், அதன்பின்னர் utilisation certificate வாங்க இன்னும் ஓரிரு வருடங்கள் ஆகலாம் என்றும் தெரிவித்தார்.

163. மேலும், மத்திய அரசினால் மத்திய அமைச்சர் தலைமையில் அனைத்து மாநில அரசுச் செயலாளர்கள் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட திட்டங்களை அந்தந்த வருடமே முடிக்கவேண்டுமென்று தெரிவித்தார்கள். அதாவது 2011–2012 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதியினை அந்த ஆண்டிலேயே செலவு செய்து நிறைவேற்றவேண்டுமென்றும், நிலுவையில் இருந்தால் அதற்கு அடுத்த ஆண்டுகளில் நிதி ஒதுக்க இயலாது என்றும் மத்திய அரசு தெரிவித்தது என்றும், மத்திய நிதி அமைச்சகம் அவ்வாறு வலியுறுத்துவதாகவும் மேலும் தெரிவித்தது. அவ்வாறு உள்ள நிபந்தனையை நீக்கவேண்டுமென்றும், திட்டம் நிறைவேறுவதற்கு இரண்டு மூன்று வருடங்கள் ஆகும் என்றும், திட்டப் பணிகளில் ஒரு சில பணிகளில் முகப்பு அலங்காரம், சுதை வேலைகள் போன்றவை செய்வதற்கு காலதாமதம் ஏற்படுகிறது என்றும் துறையின் அரசு செயலர் தெரிவித்தார்.

164. அதற்கு, குழு முகப்பு அலங்காரம், சிகைவேலைகள் போன்ற பணிகளுக்கு காலதாமதம் ஏற்படலாம் அதற்காக ஏற்பட்டால் அதனை குழுவால் ஏற்றுக் கொள்ளும் வகையில் இருக்கும். ஆனால் மிக முக்கியமான பணிகளை துறையால் மேற்கொள்ளவேயில்லை என்றே குழு கருதுகிறது.

165. அதற்கு, துறையின் முதன்மைச் செயலாளர் குழுவின் அறிவுரைகளை ஏற்று சுற்றுலாத் துறை தூரிதமாகப் பணிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்தார்.

166. சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையிலும், சுற்றுலா பயணிகள் பயன்பெறும் வகையில் மத்திய அரசினால் ஒதுக்கீடு செய்யும் நிதியினைக் கொண்டு துவங்கப்படுகிற பணிகளுக்கு சுற்றுலாத்துறை முக்கியத்துவம் அளித்து குறித்த காலத்திற்குள் உத்தேசித்துள்ள பணிகளை முடிக்கப்பெற வேண்டும் என்றும், பணிகளை முடிக்கப்பெற்ற பின் மத்திய அரசிற்கு பயனீட்டு சான்று அனுப்பி வைக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XIX . 2013–2014 ஆம் ஆண்டு மத்திய அரசு முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள்

167. ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் 2013–2014 ஆம் ஆண்டு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து குழு அறிய விரும்பியது.

168. அதற்கு துறை, 2013–2014 ஆம் ஆண்டில், சுற்றுலா மேம்பாட்டு திட்டத்தின்கீழ், சுற்றுலாப் பயணிகளின் வசதிகேற்ப அடிப்படை வசதிகள் மேற்கொள்ள, கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வால்பாறை, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவையாறு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தேன்கனிக்கோட்டை மற்றும் உங்கட்டி, கரூர் மாவட்டத்தில் உள்ள பொன்னியாறு அணை, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள உவரி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள விராலிமலை, திருமணஞ்சேரி, திருப்புவனவாசல், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தேவகோட்டை, ஈரோடு மாவட்டத்தில் உள்ள காங்கயம் பாளையம், சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணை பகுதி மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள குட்லாம்பட்டி அருவி, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோவிலூர், உள்பட முக்கிய 14 சுற்றுலாத்தலங்களுக்கு ரூ.10.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் தற்போதைய நிலையினை துறை பின்வருமாறு தெரிவித்தது.

169. இதில், தஞ்சாவூர் மாவட்டத்தில் , உள்ள திருவையாறு, கரூர் மாவட்டத்தில் உள்ள பொன்னியாறு அணை, திருநெல்வேலி மாவட்டத்தில், உள்ள உவரி, புதுக்கோட்டை மாவட்டத்தில், உள்ள விராலிமலை, திருமணஞ்சேரி, திருப்புவனவாசல், சிவகங்கை மாவட்டத்தில், உள்ள தேவகோட்டை, ஈரோடு மாவட்டத்தில், உள்ள காங்கேயம் பாளையம், சேலம் மாவட்டத்தில், உள்ள மேட்டூர் அணை பகுதி, ஆகிய இடங்களுக்கு அரசாணை வெளியிடப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தொகை அனுப்பிவைக்கப்பட்டு, பணிகள் துவங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என துறை தெரிவித்தது.

170. மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில், உள்ள வால்பாறை, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருவையாறு, கிருஷ்கிரி மாவட்டத்தில், உள்ள தேன்கனிக்கோட்டை மற்றும் உங்கட்டி, மதுரை மாவட்டத்தில் உள்ள குட்லாடம்பட்டி அருவி ஆகிய சுற்றுலா மேம்பாட்டு திட்டங்கள் மேற்கொள்ள பொதுப்பணித்துறை, வனத்துறை ஆகிய துறைகளிடமிருந்து பதில் அறிக்கைகள் எதிர்பார்க்கப்படுகிறது என துறையால் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது.

171. துறையால் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்கான பணிகளுக்கு துறை ஒப்புதல் அளித்து பணிகளை அவற்றின் மதிப்பீடுக்குள் துவங்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XX. சுற்றுலாத் துறையின் அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி

172. சுற்றுலாத் துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வழங்கப்படும் புத்தாக்கப் பயிற்சி குறித்து குழு அறிய விரும்பியது.

173. அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தின், மூலமாக புத்தாக்கப் பயிற்சி துறையின் அலுவலர்களுக்கு வழங்க, குறிப்பாக உலக அளவில் சுற்றுலா வளர்ச்சி, இணையதள முன்பதிவு, வெளிநாடுகளில் சுற்றுலா வளர்ச்சி, தகவல் போன்றவற்றை உள்ளடங்கிய புத்தாக்க மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி, அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான பயிற்சித்திட்டம் மற்றும் செலவினங்கள் ஆகியவை அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டவுடன், இப்பயிற்சி அளிக்கப்படும் என்றும், சுற்றுலா அலுவலர்களுக்கு வழங்கப்படும் புத்தாக்கப் பயிற்சியின் ஒரு பகுதியாக களப்பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும், சுற்றுலா அலுவலர்களை பிரபலமடைந்த மற்றும் பிரபலமடையாத சுற்றுலாத்தலங்களுக்கு அழைத்துச் சென்று அவ்விடங்களை ஆய்வு செய்து, சுற்றுலாப்பயணிகளுக்கு தேவைப்படும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க தக்க பயிற்சி அளிக்கப்படும்.

174. சுற்றுலாத் துறை மேம்பாடு அடைய வேண்டுமென்றால், துறையில் பணிபுரியும் அலுவலர்கள், தமிழ்நாட்டிலுள்ள பிரபலமடைந்த /பிரபலமடையாத சுற்றுலாத் தலங்கள் குறித்த விவரங்களை, முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில், பயிற்சி அமைய வேண்டும் என்றும், பயிற்சிக்குப்பின், ஆணையர் தலைமையில் அலுவலர்களால் வழங்கக்கூடிய கருத்துருக்களை பரிசீலித்து உரிய நடவடிக்கையினை மேற்கொண்டால் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் முழுப் பயன் பெற வாய்ப்பாக அமையும் என குழு கருதியது.

175. எனவே, அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்திடமிருந்து பயிற்சிக்கான அனைத்து விவரங்களையும் பெற்று விரைவில் சுற்றுலா அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப் பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXI . சுற்றுலாத் துறையில் விருந்தோம்பலை மேம்படுத்துதல்

176. சுற்றுலாத் துறையில் விருந்தோம்பலை மேம்படுத்துதல் பணி குறித்து குழு அறிய விரும்பியது.

177. அதற்கு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில், உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பம் தொடர்பாக மூன்றாண்டு பட்டயப் பயிற்சியும், உணவுத் தயாரிப்பு, உணவு மற்றும் பானங்கள் பரிமாறுதல், தங்குமிடப் பராமரிப்பு, அடுமனை பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகள் செய்தல் ஆகியவற்றில் ஓராண்டு சான்றிதழ் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

178. தங்கும் விடுதிகள் மேலாண்மை, உணவாக்கத் தொழில்நுட்பம், உணவுக் கைவினைகள், சமையலறைக் கலை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கும் இந்தியாவின் முன்னோடி கல்வி நிறுவனங்களுள் ஒன்றான சென்னை, தரமணியில் உள்ள உணவக மேலாண்மை உணவாக்கத் தொழில்நுட்பம் மற்றும் ஊட்டச்சத்து பயன்பாடு பயிற்சி நிறுவனம், விளங்கி வருகிறது என்றும், விருந்தோம்பல், உணவக நிர்வாகம், உணவாக்கத் தொழில்நுட்பம் ஆகியவை குறித்து கடந்த 1963ம் ஆண்டில் இருந்து இந்நிறுவனம் உயர்தர பயிற்சியை அளித்து வருகிறது என்றும் துறை தெரிவித்தது.

179. மேலும், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தை, மேம்பாடு செய்வதற்கு **2013–2014–**ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று துறை தெரிவித்தது.

180. 2013–2014 ஆம் ஆண்டில் **ரூ.5.00** கோடி மதிப்பீட்டில், துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில் நுட்பவியல் நிறுவன மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

181. திருச்சிராப்பள்ளி மாவட்டம் துவாக்குடியில் உள்ள மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில்நுட்பவியல் நிறுவனத்தால் அளிக்கப்படும் பயிற்சிக்கான கல்வித் தகுதி மற்றும் இதர தகுதி

i. நேஷனல் கவுன்சில் மூலமாக வழங்கப்படும் பயிற்சிகள்
மூன்றாண்டுகள் பட்டப்படிப்பு
கல்வித் தகுதி + 2 தேர்ச்சி

ii. ஒன்றரை ஆண்டு பட்டயப்படிப்பு
உணவு தயாரித்தல் , உணவு பரிமாறுதல், வரவேற்பு பயிற்சி, மற்றும் அடுமனை மற்றும் கன்பெக்ஷனர்
+2 தேர்ச்சி

iii ஒன்றரை ஆண்டு சான்றிதழ் படிப்பு – உணவுவிடுதி துறை சார்ந்த படிப்புகள் உணவு தயாரித்தல், உணவு பரிமாறுதல் – +2 தேர்ச்சி

182. பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் குறித்து துறை பின்வருமாறு தெரிவித்தது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை, மூலமாக வழங்கப்படும் அரசு கல்வி உதவித் தொகை அனைத்தும் தகுதியுள்ள மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் ECS மூலமாக வழங்கப்படுகிறது,. பயிற்சிக்குப் பின்னர் பல்வேறு நட்சத்திர விடுதிகளில் நிர்வாகப் பயிற்சி பெறுபவராக (Management Trainee) பணிபுரிய தேர்வு செய்யப்படுகின்றனர்.

திறன்சாராத நபர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி

183. இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் உனார் சே ரோஜ்கார் யோஜனா மூலம் மற்றும் திறன்சார் பயிற்சித் திட்டங்களின் கீழ் பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறவேண்டும் வயது வரம்பு 18 முதல் 28க்குள் இருத்தல் வேண்டும்.

184. திறன்சாரா வேலை வாய்ப்பு பயிற்சிகளை மேற்கொள்ள **திருச்சி** மாவட்டம், துவாக்குடியில் அமைந்துள்ள மாநில உணவக மேலாண்மை **மற்றும் உணவாக்க**

தொழில் நுட்பவில் நிறுவனம் மூலம் (HSR and CBSP) பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அதன் விபரம் பின்வருமாறு

வ .எண்	பயிற்சியின் பெயர்	தகுதிகள் வயது வரம்பு	பயிற்சி காலம்	வழங்கக் கூடிய உதவித் தொகை
1	உனார் சே ரோஜ்கார் யோஜனா – உணவு பரிமாறுதல் மற்றும் அறை பராமரிப்பு	8ம் வகுப்பு தேர்ச்சி 18 முதல் 28 வயதுக்குள்	6 வாரங்கள்	ரூ. 1500
2	உனார் சே ரோஜ்கார் யோஜனா – உணவு தயாரித்தல் மற்றும் பேக்கரி கன்பெக்ஷனரி	8ம் வகுப்பு தேர்ச்சி 18 முதல் 28 வயதுக்குள்	8 வாரங்கள்	ரூ.2000
3	ஏஸ்சிபி (SCP) திறன் மேம்பாட்டுப் பயிற்சி உணவு தயாரித்தல் உணவு பரிமாறுதல்	வயது வரம்பு ஏதுமில்லை. உணவுத்துறை சார்ந்து தொழிலில் இருத்தல் வேண்டும்	6 நாட்கள்	ரூ.1200

185. வரிசை எண் 1 மற்றும் 2ல் பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித்தொகை தவிர பயிற்சியின்போது பயிற்சி கையேடு, உணவு, தங்குமிடம். சீருடை, பயிற்சி உபகரணங்கள் ஆகியவை இலவசமாக எல்லோருக்கும் வழங்கப்படுகிறது. பயிற்சி பெற்ற நபர்கள் ஒட்டல் / மற்றும் உணவகங்களில் பணிக்கு நியமனம் செய்யப்படுவதால், ஒட்டல் துறையின் தரம் மேம்படுத்தப்பட்டு சுற்றுலா பயணிகள் மனநிறைவுடன் சேவைகளை பெறுகின்றார்கள்.

186. வரிசை எண் 1 மற்றும் 2ல் பயிற்சி பெறுபவர்களுக்கு உதவித்தொகை தவிர பயிற்சியின்போது பயிற்சி கையேடு, உணவு, தங்குமிடம். சீருடை, பயிற்சி உபகரணங்கள் ஆகியவை இலவசமாக எல்லோருக்கும் வழங்கப்படுகிறது. பயிற்சி பெற்ற நபர்கள் உணவு விடுதி துறையில் பணிக்கு நியமனம் செய்யப்படுவதால் உணவு விடுதி துறையின் தரம் மேம்படுத்தப்பட்டு சுற்றுலா பயணிகள் மனநிறைவுடன் சேவைகளை பெற்று கொள்கிறார்கள். வரிசை எண் 3ல் பயிற்சி பெறுபவர்கள் பயிற்சி முழுமை செய்யும் பட்சத்தில் உதவித்தொகை மட்டும் வழங்கப்படுகிறது என துறை தெரிவித்தது.

XXII. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள்

187. கண்காட்சிகள் மற்றும் விழாக்கள் நடத்த துறையால் எத்தகையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவ்வாறு நடத்தப்படும் போது துறையால் உரிய முறையில் விளம்பரம் செய்யப்படுகிறதா என்றும், எந்த விழாவிற்கு சுற்றுலா பயணிகளின் வரவேற்பு அதிகமாக உள்ளது என்றும் குழு அறிய விரும்பியது.

188. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள் **உல்லாசம்** மற்றும் மகிழ்ச்சி அலைகளை ஏற்படுத்தி வருகைதரும் சுற்றுலா பயணிகளை உற்சாகப்படுத்துகிறது. சுற்றுலா அறிவு வளர்ச்சிக்கு மட்டுமின்றி **மனமகிழ்ச்சிக்கு** அடிப்படை காரணியாக விளங்குகிறது. மேலும் ஒரு நாட்டினுடைய **பொருளாதாரத்தை** மேம்படுத்துவதோடு அன்னிய செலாவணியை பெருமளவில் ஈட்டித்தருகிறது. சுற்றுலா

ஒரு தொழிலாக அறிவிக்கப்பட்டு மிக வேகமாக வளர்ந்து வருகிறது. பொருளாதார வளத்தை வேகமாக வளர்க்கும் தன்மை சுற்றுலாவுக்கு உண்டு. இந்தியாவுக்கு வருகை தரும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. குறிப்பாக, வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் இந்தியாவின் கலாச்சாரம், கோவில்களின் கட்டிடக்கலைகள், நமது பாரம்பரியம் மற்றும் வாழ்க்கைமுறை ஆகியவற்றை பெரிதும் விரும்புகிறார்கள். இதனை வெளிகொணரும் வகையிலும் சுற்றுலா பயணிகளின் வருகையினை அதிகரிக்கும் வகையிலும் கண்காட்சிகள் மற்றும் விழாக்கள் நடத்தப்படுகின்றன என்றும் துறை தெரிவித்தது.

189. தமிழக சுற்றுலாத்துறையினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் முக்கிய விழாக்கள் மற்றும் கண்காட்சிகளின் விபரம் பின்வருமாறு இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. **(இணைப்பு–1)**

190. கண்காட்சிகள் மற்றும் விழாக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றும், சுற்றுலாத்துறையின் மூலம் நடத்தப்படும் அனைத்து விழாக்கள் / கண்காட்சிகள்/ பொருட்காட்சிகளுக்கு சுற்றுலா பயணிகளிடம் அதிக வரவேற்பு உள்ளது என்றும், துறையால் தெரிவிக்கப்பட்டது.

XXIII. சுற்றுலாத் துறையால் சர்வதேச மற்றும் இந்தியாவில் இதர மாநிலங்களில் நடத்தப்படும் விழாக்கள்

191. அரசுக்கு அந்நியச் செலவாணி கிடைக்கும் நோக்கோடு சர்வதேச சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் அவர் தம் நாடுகளில் நடத்தப்படும் விழாக்கள் போன்றே தமிழ்நாட்டில் நடத்தவும், இந்தியாவின் இதர மாநிலங்களில் இருந்தும் வருகை புரியும் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் அவர்களின் மாநிலத்தில் நடத்தப்படும் விழாக்கள் போன்றே தமிழ்நாட்டில் நடத்தப்படுகிறதா என குழு அறிய விரும்பியது.

192. வெளிநாடுகளில், அந்நாட்டின் பாரம்பரிய விழாக்களை அவர்களுடைய கலாசாரத்தை முன்னிலை படுத்தி நடத்தப்படுகின்றன. அதே போல், நம் நாட்டிலும் நம்முடைய புகழ்மிக்க பாரம்பரிய கலை, பண்பாடு ஆகியவற்றை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்திடும் வகையில் பல விழாக்கள் நடத்தப்படுகின்றன என துறை தெரிவித்தது.

193. உதாரணமாக, இந்தியாவின் பிறமாநிலங்களில் நடத்தப்படும் பாரம்பரியமிக்க விழாக்களான கஜுராகோ நாட்டிய விழா – மத்தியப் பிரதேசம், கரசேவா நாட்டிய விழா – புவனேஸ்வர் போன்று மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா டிசம்பர் – ஜனவரி மாதங்களில் ஒரு மாத காலத்திற்கு சுற்றுலாத்துறையினால் மிக சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. இவ்விழா இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் முன்னனி பாரம்பரிய மற்றும் நாட்டுப்புற கலைகளை போற்றும் வகையில் நடத்தப்படுகிறது. இவ்விழா வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை அதிக அளவில் கவருவதுடன் அவர்கள் ஒரு மாத காலத்திற்கு தங்கி இவ்விழாவினை கண்டுகளிக்கின்றார்கள். இதே போல் மார்கழி மாத இசை விழா, சிதம்பரம் நாட்டிய விழா, திருவையாறு மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நடைபெறும் இசை மற்றும் நாட்டிய விழாக்கள் சுற்றுலா பயணிகளை அதிக அளவில் கவருகின்றன. இதனால் அன்னியச் செலவாணி அதிகம் கிடைக்க வாய்ப்பாக அமைகிறது என துறை தெரிவித்தது.

XIV . தமிழ்நாட்டின் கலாச்சாரம் அடிப்படையில் நடத்தப்படும் விழாக்களை இதர மாநிலங்களில் நடத்துதல்

194. துறையால், தமிழ்நாட்டின் கலாச்சாரம் அடிப்படையில் நடத்தப்படும் விழாக்களை இதர மாநிலங்களில் நடத்துவதற்கு ஏதேனும் கருத்துரு துறையிடம் உள்ளதா என்றும், அவ்வாறு இல்லாத நேர்வில் அதனை கருத்தில் கொண்டு கருத்துருவினை உருவாக்கி துறை அதனை பரிசீலிக்கலாம் என குழு கருதியது. இதற்கு துறையின் கருத்தினை குழு அறிய விரும்பியது.

195. தமிழக கலாச்சாரம் மற்றும் தமிழக பாரம்பரிய கலைகளை விளம்பரபடுத்தும் வகையில் வெளிமாநில சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள் மூலமாக பொங்கல் சுற்றுலா விழா மற்றும் உலகச் சுற்றுலா தினம் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது என்றும், துறையால் தமிழ்நாட்டின் கலாச்சாரம் அடிப்படையில் நடத்தப்படும் விழாக்களை இதர மாநிலங்களில் நடத்துவதற்கு கருத்துரு ஏதும் சுற்றுலாத்துறையிடம் பரீசிலினையில் இல்லை என்றும் அவ்வாறு குழு கருதினால் கருத்துருவினை உருவாக்கி பரிசீலிக்கப்படும் என துறையால் தெரிவிக்கப்பட்டது.

196. தமிழ்நாட்டின் காலாசாரத்தை இந்தியாவில் உள்ள இதர மாநிலங்களுக்கு எடுத்துச் செல்வதில் சுற்றுலாத் துறை மிக முக்கியமான பங்கு வகிப்பதால் தமிழ்நாட்டில் நடத்தப்படும் கலாச்சாரம் அடிப்படையிலான விழாக்களில் இதர மாநிலங்களில் நடத்தும் வண்ணம் துறை ஒரு கருத்துருவினை உருவாக்கி பரிசீலித்து பரிசார்த்த முறையில் **(Pilot Basis)** அடிப்படையில் ஏதேனும் மாநிலங்களை தேர்வு செய்து நடத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXV. சுற்றுலா வளர்ச்சிக்காக மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழு

197. சுற்றுலா வளர்ச்சிக்காக மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழுவின் அமைப்பு மற்றும் அக்குழுவின் செயல்பாடு குறித்து குழு அறிய விரும்புகிறது.

198. அதற்கு, துறை அக்குழுவின் அமைப்பு மற்றும் செயல்பாடு குறித்து பின்வருமாறு தெரிவித்தது.

199. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் சுற்றுலா வளர்ச்சிக்காக மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழு செயல்பட்டு வருகிறது. அதன் விவரம் கீழே குறிப்பிடப்படுகிறது.

குழு உறுப்பினர்களின் விவரம்:-

1. திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை)
2. சுற்றுலா அலுவலர்
3. ஆணையர் , மாநகராட்சி
4. வட்டார வளர்ச்சி அலுவலர்
5. செயற் பொறியாளர்
6. மாவட்ட வன அலுவலர்
7. இணை இயக்குநர் / செயல் அலுவலர், (இந்து சமய அற நிலையங்கள் துறை),
8. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை)
9. இனை இயக்குநர், தோட்டக்கலைத் துறை
10. செயல் அலுவலர் / உதவி இயக்குநர் (பேரூராட்சி)

200. மேற்கண்ட துறையைச் சார்ந்தவர்கள் குழுவின் உறுப்பினர்களாக உள்ளார்கள். மேலும், சுற்றுலா பயணிகள் குறைகள், கள ஆய்வு செய்து திட்ட மதிப்பீடு செய்தல், சுற்றுலா முகவர்கள் மற்றும் சுற்றுலா சார்ந்த அனைவருடனும் ஒருங்கினைப்பு கூட்டம் நடத்துதல், விழிப்புணர்வு முகாம், சுற்றுலா விழாக்களின் போது பங்களித்தல் போன்ற முக்கிய பணிகள் ஆகியவற்றில் இக்குழுவினருடன் கலந்தாலோசித்து அவர்களின் கருத்தறிந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட துறைகளின் மூலமே திட்டப் பணிகள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

201. ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசிடமிருந்து நிதியினைப் பெற்று செயல்படுத்தும் திட்டங்களுக்கு சுற்றுலாத் துறையினால் நிர்வாக ஒப்புதல் அளித்து பல்வேறு முகமையினால் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்த காலத்திற்குள் முடிப்பதற்கும், அப்பணிகளை மேற்பார்வையிட வேண்டும் என்றும், பணிகள் முடிவுற்றபின் பயனீட்டுச்சான்று (Utilisation Certificate) வழங்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXVI. சுற்றுலா மற்றும் சமூகம் சார்ந்த சுற்றுலா

202. சமூகம் சார்ந்த சுற்றுலா, நிலைத்த சுற்றுலாவின் ஒரு அங்கமாகவும், உள்ளூர் பகுதிகளின் வளங்களை பயன்படுத்துவதால் தீங்கற்ற விளைவுகளை ஏற்படுத்துவதுடன், அப்பகுதிகளுக்கு அதிகரிக்கும் நன்மைகளான உற்பத்தி, வேலை வாய்ப்பு, மேம்பட்ட வளங்களின் விநியோகம், சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார பாதுகாப்பு, உள்ளூர் மக்களின் ஈடுபாடு ஆகியவற்றோடு பாரம்பரிய நம்பிக்கைகள் மற்றும் நவீன காலத்தின் மதிப்பு தழுவிய ஒரு பொருத்தமான வழியையும் உருவாக்குகிறது.

சுற்றுலா மற்றும் சமூக மேம்பாடு சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல்

203. கோயம்பத்தூரிலிருந்து 72 கி.மீ தூரத்தில் வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பரளிகாடு என்ற இடத்தில் அமைந்துள்ள நீர் வீழ்ச்சியில் மலைவாழ் மக்களின் பங்கேற்புடன் அங்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு பரிசல் சவாரி மற்றும் மதிய உணவு சிற்றுண்டி ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக அப்பகுதி மக்களை உள்ளடக்கிய வனக்குழு அமைக்கப்பட்டு அவர்களுக்கு உரிய முறையில் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இதனால் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதுடன் வனப்பகுதியை சுற்றுச்சூழல் கெடாமல் பாதுகாக்கவும் ஏதுவாக அமைகிறது.

204. காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் செல்லும் சாலையில் தண்டரை கிராமத்தில் மூலிகை சுற்றுலா (இருளர் மக்களின் பங்கேற்புடன்) பல விதமான மூலிகைச் செடிகள் பயிரிடப்பட்டு சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்த செயல்பாட்டினை IRULAR TRIBAL WOMEN WELFARE SOCIETY என்ற நிறுவனத்தால் நடத்தப்பட்டுவருகிறது. மேலும் இந்த நிறுவனத்திற்கு ஊரக வளர்ச்சி துறை மூலம் கடன் வசதிகளும் அளிக்கப்படுகின்றன. 2008–2009ம் நிதியாண்டில் மத்திய அரசு சுற்றுலா அமைச்சகத்தின் சார்பில் சிறந்த கிராமிய சுற்றுலாவிற்கு தேசிய விருதும் வழங்கப்பட்டுள்ளது.

205. கிழக்கு கடற்கரை, சாலையிலுள்ள முதலியார்குப்பத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படுகின்ற படகுக் குழாமில் படகு செலுத்துவதற்கு படகோட்டிகளை சுற்று வட்டாரங்களிலுள்ள மீனவ சமுதாயத்தைச் சாந்தவர்கள் மூலம் நடைமுறைபடுத்தப்படுகிறது. இதனால் இப்பகுதியினை மீனவ சமுதாய மக்கள் பயன்பெறுவதுடன் அவர்களின் வாழ்வாதாரம் உயருகிறது.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு

206. சுற்றுலாப் பயணிகளின் பாகுகாப்பு கருதி சுற்றுலா பாதுகாப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்த பாதுகாப்பு அமைப்பில் ஒய்வு பெற்ற இராணுவ வீரர்கள் பணியமர்த்தப்பட்டனர். முதன் முதலாக மாமல்லபுரம், மதுரை, கன்னியாகுமரி, கொடைக்கானல், இராமேஸ்வரம் ஆகிய ஐந்து இடங்களில் நிலைய சுற்றுலா காவலர் பதவியின்கீழ் ஐந்து சுற்றுலா காப்பாளர்கள் உள்ளனர். இவர்கள் அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பாக இருக்கின்றனர்.

207. துறையின் அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுலா பாதுகாவலர்களை பொறுத்தமட்டில், Texco-மூலம் முன்னாள் இராணுவத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சுற்றுலா பகுதியில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். தற்போது, இந்தப் பாதுகாப்பு பணிக்கு மொத்தம் 30 பேர் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். கொடைக்கானல், இராமேஸ்வரம், ஊட்டி, மாமல்லபுரம் ஆகிய ஒவ்வொரு இடங்களிலும் 5 பேர் இருக்கிறார்கள் என்றும், கூட்டம் அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் உள்ள மக்களுக்கெல்லாம் பாதுகாப்பு கொடுப்பதோடு, அங்கு வேறு ஏதாவது சிறு சிறு விபத்துகள் ஏற்பட்டாலோ அந்த விபத்துகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளைக் காப்பாற்றுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

208. குழு சுற்றுலா பாதுகாவலர்களை எவ்வாறு நியமிக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்பியது.

209. அதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலர், 2011–2012 ஆம் ஆண்டில் மத்திய அரசு சுற்றுலா பாதுகாவலர்களை பணியமர்த்துமாறும் மத்திய அரசு நிதி தருவதாகத் தெரிவித்தது. எனினும், சுற்றுலா பாதுகாவலர்களை பணியில் அமர்த்திய பின்பு நிதி இல்லையென்று மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டது. . தற்போது அவர்களுக்கு வழங்கக்கூடிய ஊதியத்தை மாநில அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்.

210. சுற்றுலாத் துறையில் சுற்றுலா பாதுகாவலர்களின் பங்கு மிக முக்கியமானது என்பதால் அதனை வலியுறுத்தி மத்திய அரசிடமிருந்து நிதியினைப் பெறுவதற்கு துறையால் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXVII . வணிகச் சின்னத்தை பிரபலப்படுத்துதல்

211. வணிகச் சின்னத்தை பிரபலப்படுத்துதல் என்கிற தலைப்பின் கீழ் "தமிழ்நாட்டைக் கண்டறிவோம் பிரச்சாரம்" 2012–2016 வரை செயல்படுத்துதல் குறித்தும், 2012 முதல் இப்பிரச்சாரம் நடைமுறையில் உள்ளதால் துறையால் எங்கு எங்கு இது குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும், இதற்காக துறையால் இனிவருகின்ற காலங்களில் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை குறித்தும் இதற்கு தேவைப்படும் நிதி எவ்வாறு பெறப்படுகிறது என்றும் துறையிடமிருந்து குழு அறிய விரும்புகிறது.

212. வணிகச் சின்னத்தை பிரபலப்படுத்துதல் நோக்கமாக பன்னாட்டுச் சுற்றுலா சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்துகொண்டு தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்களையும், பாரம்பரியமிக்க கலாச்சரம், விழாக்கள் போன்றவற்றை சந்தைப்படுத்துகிறது. 2013 ஆம் ஆண்டில் சீனாவில் செங்குடுவில் நடைபெற்ற பசிபிக் ஆசிய பயண முகவர் மாநாட்டில் கலந்து கொள்ளப்பட்டது. அதேபோல் 2012–2013 ஆம் ஆண்டுகளில் லண்டனில் நடைபெற்ற உலக சுற்றுலா பயணச்சந்தைகளில் கலந்துகொள்ளப்பட்டது. 2012–2013ஆம் ஆண்டுகளில் பன்னாட்டு சுற்றுலாச் சந்தை – பெர்லினில் கலந்துகொள்ளப்பட்டது. மேலும் 2013ஆம் ஆண்டில் பாரிசில் சுற்றுலாத்துறை சிறப்பு விளம்பர முகாம் ஒன்று நடத்தப்பட்டது. இச்சந்தைகளில் பிரத்யேகமாக தயாரிக்கப்பட்ட மென்பதிவில் அந்தந்த நாட்டு மொழிகளில் ஜெர்மன், பிரெஞ்ச், ஆங்கிலம் மற்றும் சீன மொழிகளில் தமிழ்நாட்டு சுற்று வளங்களையும், வரைபடம் ஆகியன தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன. அனைவரும் பாராட்டும் வகையில் அமையப்பெற்றது. பன்னாட்டு சந்தைகளில் மேலும் புதிய யுத்திகளோடு வணிக சின்னத்தை விளம்பரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கான நிதியை அரசிடம் இருந்து பெறப்படுகிறது என்பதை துறை தெரிவித்தது.

213. நவீன காலத்திற்கேற்ப பன்னாட்டு சந்தையில் மேலும் புதிய யுத்திகளோடு வணிக சின்னத்தை பிரபலப்படுத்த சுற்றுலாத் துறை உரிய நடவடிகையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXVIII . சுற்றுலா அலுவலகங்கள் அனைத்தும் சர்வதேச தரத்திற்கு தரம் உயர்த்தல்

214. சுற்றுலா அலுவலகங்கள் அனைத்தும் சர்வதேச தரத்திற்கு தரம் உயர்த்தப்படும் என துறையால் தெரிவித்ததை குறித்து குழு அறிய விரும்புகிறது.

- சுற்றுலா அலுவலகங்களின் மற்றும் சுற்றுலா தகவல் மையங்களின் சேவைத்தரம் சர்வதேச தரத்தில் இருந்தால்தான் அதிக அளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும் என்றும்,

- சுற்றுலா தகவல் அளித்தல் மற்றும் சேவைகளை உயர்த்தும் பொருட்டு சுற்றுலா அலுவலகப் பணியாளர்களுக்கு தக்க பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும் ரூ.98 இலட்சம் செலவில் சென்னை, கோயம்புத்தூர், கொடைக்கானல், கன்னியாகுமரி, காரைக்குடி, மாமல்லபுரம், இராமேஸ்வரம், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, உதகமண்டலம், வேலூர் சுற்றுலா அலுவலகங்களுக்கும் 14 பொலிரோ ஈப்புகளும் மற்றும் சிதம்பரம், தர்மபுரி, மதுரை, பூம்புகார் ஆகிய சுற்றுலா அலுவலகங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் 4 பொலிரோ ஈப்புகளும் வழங்கப்பட்டுள்ளது என்றும்,

- சுற்றுலா அலுவலகங்களுக்கு கணினிகள், பிரிண்டர்கள், டிஜிட்டல் பதிவு மற்றும் திரைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும்,

- பகுதி –II திட்டத்தின் கீழ் ரூ.54 இலட்சம் செலவில் சுற்றுலா அலுவலகம் கொடைக்கானல், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், திருநெல்வேலி, தஞ்சாவூர், சிதம்பரம், தர்மபுரி, சேலம், பூம்புகார் மற்றும் சுற்றுலா தகவல் மையம் திருச்சிராப்பள்ளி, ஐதராபாத், சென்னை விமான நிலையம், கோயம்பேடு

பேருந்து நிலையம், சென்ட்ரல் மற்றும் எழும்பூர் இரயில் நிலையங்கள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது என துறையால் தெரிவிக்கப்பட்டது.

XXIX ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு சுற்றுலாத் துறையில் உள்கட்டமைப்பு மேம்பாடு மூலதனத் திட்டம்

215. சுற்றுலா கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான ஆசிய வளர்ச்சி வங்கியின் உள்கட்டமைப்பு மேம்பாடு மூலதனத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள், குறித்து குழு அறிய விரும்புகிறது.

216. தமிழ்நாடு சுற்றுலாத்துறையில் உள்கட்டமைப்பு மேம்பாடு மூலதனத் திட்டத்திற்காக [IDIPT] ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் ரூ.450 கோடிக்கான விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்ட மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் பங்கு 70 விழுக்காடும் (ரூ.315 கோடி), மாநில அரசின் பங்கு 30 விழுக்காடும் (ரூ.135 கோடி) ஆகும்.

217. இம்மூலதனத் திட்டம் தவணை முறையில் முதலீடு செய்யும் வகையில் வகுக்கப்பட்டு முதல் தவணையாக ரூ.135 கோடி செலவாகும் என திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின்படி தமிழ்நாடு சுற்றுலாத்துறையில் உள்கட்டமைப்பு மேம்பாடு மூலதனத் திட்டத்திற்காக [IDIPT] ஆசிய வளர்ச்சி வங்கி முதல் தவணை வழங்குவதற்காக 29.35 மில்லியன் அமெரிக்க டாலர் (இந்தியன் ரூபாயின் ரூ.135 கோடி) கடன் ஒப்பந்தத்தில் இந்திய அரசு, ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவை 02.04.2012 அன்று புதுடெல்லியில் கையெழுத்திட்டுள்ளன. இக்கடன் திட்டம் 19.06.2012 முதல் அமலுக்கு வந்திருப்பதை ஆசிய வளர்ச்சி வங்கி உறுதி செய்துள்ளது. மேற்கண்ட நிதி உதவியில் முதல் தவணையாக 70 விழுக்காடு (ரூ.94.50 கோடி) ஆசிய வளர்ச்சி வங்கியின் பங்கும், 30 விழுக்காடு (ரூ.40.50 கோடி) மாநில அரசின் பங்கும் ஆகும்.

(i) கிழக்கு கடற்கரை சுற்று குறித்த பணிகள் முடிவுற்று சுற்றுலா துவங்கப்பட்டதா அல்லது துறையால் செயல்படுத்த, வகுக்கப்பட்ட யுத்திகள் குறித்து குழு அறிய விரும்பியது.

218. இப்பகுதியில் பணிகள் மேற்கொள்ள முதல் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. பூர்வாங்கப் பணிகள் இப்பகுதிகளில் ஜூலை 2014–ல் துவங்கப்படும் என்றும்,

(ii) துறை அளித்த கொள்கை விளக்கக் குறிப்பின்படி, 16 துறை திட்டப் பணிகள் யாவை என்றும், இவற்றை செயல்படுத்த இதர துறைகளின் பங்கு என்ன என்றும், இத்திட்டத்தில் 16 துணை திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன . இத்திட்டத்தில் 2 மாநகராட்சிகள், 6 நகராட்சிகள் மற்றும் 4 பேரூராட்சிகள் உள்ளடக்கியதாகும் என துறை தெரிவித்தது.

219. துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் கிழக்குக் கடற்கரை சுற்று மற்றும் தென்பகுதி சுற்று ஆகியவற்றில் பூர்வாங்கப் பணிகள் முடிக்கப்பெற்று அதற்கான அனைத்து விவரங்களையும் உள்ளடங்கிய விளம்பரத்தை துறையின் இணையதளத்தில் வெளியிட்டு விரைவில் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXX. மாநில அளவிலான வழிகாட்டு குழு மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு

220. மாநில அளவிலான வழிகாட்டு குழு மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு செயல்பாடு குறித்து குழு அறிய விரும்புகிறது.

221. மாநில அளவிலான வழிகாட்டு குழுவின் கூட்டம் 08.08.2012–ம் தேதியும், மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவின் கூட்டம் 31.08.2012 மற்றும் 26.08.2013–ம் தேதியும் முறையே நடைபெற்றது. திட்ட மேலாண்மை அலகு (Project Management Unit) அலுவலகம் சென்னையிலும், திட்ட செயலாக்க அலகு (Project Implementation Unit) அலுவலகம் மயிலாடுதுறை மற்றும் மதுரையிலும் செயல்பட உள்ளது. இக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி 15 இடங்களில் துணை திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. என்றும், திட்ட மேலாண்மை ஆலோசகர் (Project Management Consultant) மற்றும் திட்ட வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசர் (Design and Supervision Consultant) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 16 துணை திட்டங்களுக்கு ஒப்பந்தங்கள் பல்வேறு தேதிகளில் கோரப்பட்டுள்ளன. இவ் ஒப்பந்தங்கள் பெறப்பட்ட பின் ஆசிய வளர்ச்சி வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு மாநில அளவிலான வழிகாட்டு குழு மற்றும் அதிகாரம் அளிக்கப்பட்ட குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெறப்பட்ட பின் பூர்வாங்கப் பணிகள் அந்தந்த பகுதிகளில் ஜூலை 2014–ல் தொடங்கப்படும் என்றும் துறையால் தெரிவிக்கப்பட்டது.

222. துறையால் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்கும் மதிப்பீடு விரைவாக பரிசீலித்து பணிகளும் குறித்த காலத்தில் துவங்கப்பட வேண்டும் என்றும், பணிகள் அனைத்தும் முடிக்கப்பெற்று சுற்றுலாத் துறை மேம்பாட்டினை உறுதி செய்யப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXXI. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

223. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் சுற்றுலா குறித்து குழு அறிய விரும்பியது. அதற்கு துறை பின்வருமாறு தெரிவித்தது.

224. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் நலன் கருதி சலுகை கட்டணத்தில் கல்வி சுற்றுலா (Educational Tour under concessional rates) என்கிற சுற்றுலாவை உருவாக்கி அதில் பள்ளி மாணவர் அல்லது கல்லூரி மாணவர்கள் அவர்கள் கல்வி பயில்கிறவற்றை நேரில் கண்டறிவதற்கும், ஆராய்ச்சிக்கும் (Botanical Tour Environmental, Geographical and Geological Tours) உறுதுணையாக இருக்கும் என்றும், இச்சுற்றுலா தொடர்பாக பள்ளி மற்றும் கல்லூரிகள் அறிந்து கொள்ளும் வகையில் துறையின் இணையதளத்தில் விளம்பரம் செய்தால் நன்றாக இருக்கும் என்பதால் துறை பள்ளிக்கல்வி / உயர்கல்வி/ போக்குவரத்துத்துறை ஆகிய துறைகளோடு துறை கலந்தாய்வினை மேற்கொண்டால் துறைக்கு வருவாய் கிடைப்பதோடு, மாணவர்களும் பயன்பெற நல்ல வாய்ப்பாக அமையும் எனவும் குழு கருதியது. இதற்கு துறையின் கருத்தினை குழு அறிய விரும்புகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 47 சுற்றுலாக்களை நடத்துகிறது இணைப்பில் உள்ளபடி.(இணைப்பு –2)

225. அச்சுற்றுலாக்களில் பல சுற்றுலாக்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பொருந்தும் என்றும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 2013–2014 ஆம் ஆண்டில் மாணவர்கள் சென்று வந்த சுற்றுலா பட்டியல் பின்வருமாறு:–

1.	Y.P.S. பள்ளி, பாட்டியாலா	66 நபர்கள்	மைசூர், பெங்களூர், ஊட்டி சுற்றுலா
2.	ரிஷி வேலி, பள்ளி, மதனபள்ளி	116 நபர்கள்	மாமல்லபுரம், பாண்டிச்சேரி சுற்றுலா
3.	உள்கட்டமைப்பு மற்றும் நகர்புற மேம்பாட்டுக் கல்லூரி, லக்னோ	37 நபர்கள்	14 நாட்கள் மகிழ்ச்சிகரமான தெற்கு சுற்றுலா
4.	DAV பள்ளி, சென்னை	70 நபர்கள்	ஸ்ரீஹரிகோட்டா சுற்றுலா

226. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அனைத்து சுற்றுலாக்களும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இணையதளமான www.tamilnadutourism.org என்ற இணையதளத்தில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பள்ளி மற்றும் கல்வி சுற்றுலாவிற்காக பள்ளிக்கல்வி /உயர் கல்வித் துறையுடன் ஏற்கெனவே தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடர்பில் உள்ளது. இந்த சுற்றுலாக்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பேருந்துகள் மூலம் நடத்தப்பட்டு வருகிறது என்றும், தேவைப்பட்டால் போக்குவரத்து துறையோடு கலந்தாய்வு மேற்கொள்ளப்படும் என்றும், சர்வ சிக்ஷா அபியான் (SSA)/ராஷ்ட்ரிய மத்திய சிக்ஷா அபியான் (RMSA) திட்டத்தின்கீழ் இயங்கிவரும் பள்ளிகளுக்கு அவர்கள் விரும்பிய கல்வி சுற்றுலாவை நல்லமுறையில் ஏற்பாடு செய்து நடத்தி முடிக்கப்பட்டுள்ளது என்றும், 2011–12ம் ஆண்டு RMSA திட்டத்தின் கீழ் 4,416 பள்ளி ஆசிரியர்கள் பயன்பெற்றுள்ளனர். இதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 3.09 கோடி வருமானம் கிடைக்கப்பெற்றது என்றும், அதன்பின் 2012–13 மற்றும் 2013–14ல் RMSA திட்டத்தின் கீழ் சுற்றுலாக்கென நிதி ஒதுக்கப்படவில்லை. என்றும், அதன் காரணமாக சுற்றுலா நடத்த வாய்ப்பு குறைந்து விட்டது எனத் துறை தெரிவித்தது.

227. சுற்றுலாத் துறை மத்திய அரசு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சிறப்பு சுற்றுலாக்கள் ஏற்படுத்த துறை முயற்சி மேற்கொள்வதாகவும் குழுவிற்கு தெரிவித்தது. இருப்பினும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொடர் முயற்சியினால் SSA திட்டத்தின் கீழ் 2013–14ல் 4,468 பள்ளி மாணவர்களுக்காக சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டு அதன் மூலம் ரூ. 18.00 இலட்சம் வருமானம் கிடைக்கப்பெற்றதாக துறை மேலும் தெரிவித்தது.

228. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பள்ளி சிறுவர்களுக்கு சர்வ சிக்ஷா அபியான் (SSA)/ராஷ்ட்ரிய மத்திய சிக்ஷா அபியான் (RMSA) திட்டங்கள் மூலம் தொடர்ச்சியாக சுற்றுலா அழைத்து செல்ல திட்டமிடப்பட்டுள்ளது என்றும், பொது நிறுவனங்கள் குறிப்பாக மத்திய அரசு நிறுவனங்களின் ஊழியர்களுக்கு சிறப்பு சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXXII தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்படும் ஓட்டல்களின் தரத்தினை மேம்பாடு செய்தல்

229. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தரத்தினை மேம்பாடு செய்தல் குறித்து குழு அறிய விரும்புகிறது. அதற்கு துறை பின்வரும் தகவலை தெரிவித்தது.

ஓட்டல்களின் தரம் உயர்த்துதல்

- ஓட்டல் தமிழ்நாடு, ஒக்கேனக்கலிலுள்ள 17 அறைகளை ரூ.43.78 லட்சத்தில் தரம் உயர்த்துவதற்கு டிசம்பர் 2013ல் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணி ஆறு மாத காலத்தில் முடிவு பெறும் என்றும்,

- ஓட்டல் தமிழ்நாடு, திருவண்ணாமலையில் சுற்றுச் சுவர் ஏற்படுத்த ரூ.19.07 லட்சத்திற்கு டிசம்பர் 2013ல் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி மூன்று மாத காலத்தில் முடிவு பெறும் என்றும்,

- ஓட்டல் தமிழ்நாடு, ஓசூரில் கலந்தாய்வுக் கூடம் (Conference Hall) ஏற்படுத்த ரூ.40.61 லட்சத்திற்கு டிசம்பர் 2013ல் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி ஏழு மாத காலத்தில் முடிவு பெறும் என்றும்,

- ஓட்டல் தமிழ்நாடு, திருச்செந்தூரில் சுற்றுச் சுவர் ஏற்படுத்த ரூ.18.66 லட்சத்திற்கு அக்டோபர் 2013ல் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி ஏப்ரல் மாதத்திற்குள் முடிவு பெறும் என்றும்,

- ஓட்டல் தமிழ்நாடு, குற்றாலம்–2ல், 12 அறைகளை தரம் உயர்த்துவதற்கு ரூ.26.47 லட்சத்திற்கு டிசம்பர் 2013ல் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணி நான்கு மாத கால அவகாசத்தில் முடிவு பெறும் என்றும்,

- ஓட்டல் தமிழ்நாடு, ஊட்டியில், 36 அறைகள் மற்றும் தாழ்வாரங்களின் தரம் உயர்த்துவதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டு வரும் பிப்ரவரி 2014ல் முடிவு செய்யப்படும். பணிகள் ஆறு மாதங்களில் முடிவு பெறும் என்றும்,

- ஊட்டியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு, இளைஞர் விடுதியை ரூ.41.00 லட்சத்தில் தரம் உயர்த்துவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு வரும் பிப்ரவரி 2014ல் முடிவு செய்யப்படும் என்றும்,

- ஊட்டியில் உள்ள தாவரவியல் பூங்காவில் உள்ள சிற்றுண்டியகத்தை (Snack Bar) புதுப்பிக்க ரூ. 35.00 லட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தொட்டாபெட்டா தொலைநோக்கு இல்லத்திலுள்ள சிற்றுண்டியகத்தை (Snack Bar) புதுப்பிக்க ரூ. 32.00 லட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது இது சம்மந்தமான ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு வரும் பிப்ரவரி 2014ல் முடிவு செய்யப்படும். இந்த வேலைகள் அனைத்தும் ஆறுமாதங்களில் முடிவுறும் என துறையால் தெரிவிக்கப்பட்டது என்றும்,

(ii) போக்குவரத்து பிரிவு

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சுற்றுலா பேருந்துகளை நிறுத்திவிட்டு அதற்கு பதிலாக புதிய பேருந்துகளை வாங்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது என்றும்,

- இரண்டு 18 இருக்கைகள் கொண்ட குளிர்சாதனமூட்டப்பட்ட பேருந்துகள் ஜூலை 2013 ல் வாங்கப்பட்டுள்ளது என்றும்,

- வால்வோ பேருந்து வாங்குவதற்கு ஆணைப்பிறப்பித்து வரும் மார்ச் 2014ல் செயல்பாட்டுக்கு வரும் என்றும்,

- மீதமுள்ள பழைய பேருந்துகளை நிறுத்திவிட்டு புதிதாக பேருந்துகளை மாற்றியமைத்து சுற்றுலா பயணிகளுக்கு மிகுதியான வசதிகளை பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும்,

- பல புதிய சுற்றுலாக்கள் 2013–2014 ஆம் வருடம் தொடங்கப்பட்டுள்ளது என்றும், துறை தெரிவித்தது.

230. துறையால் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் நடைமுறைபடுத்த உத்தேசித்துள்ள பணிகளை உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு முடிக்கப் பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

XXXIII. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

தமிழ்நாடு கடல்சார் அருங்காட்சியகம் மாமல்லபுரத்தில் அமைத்தல்

231. மேற்படி அருங்காட்சியத்தை அமைத்தலுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஒருங்கிணைப்பு முகவராக நியமிக்கப்பட்டுள்ளது. இது செயலற்ற "வாக்லி" நீர்மூழ்கி கப்பலை நடுமையமாக கொண்டு அமைக்கப்பட உள்ளது. இத்திட்டம் இரண்டு நிலைகளில் மேற்கொள்ளப்படுகிறது.

முதல் நிலை

232. வாக்லி நீர்மூழ்கி கப்பலை விசாகப்பட்டினத்திலிருந்து மாமல்லபுரம் கடற்கரைப் பகுதிக்கு இழுத்து நிலத்தில் நிலைப்படுத்துவது.

இரண்டாம் நிலை

233. நீர்மூழ்கி கப்பலை கடற்படை அருங்காட்சியமாக மாற்றி பிறவசதிகளாகிய பாரம்பரிய அருங்காட்சியகம், கடல்சார் கல்வி, ஒலி, ஒளி படப்பிடிப்பகம் (Audio Visual Studio) மீன் அருங்காட்சியகம், நினைவு பொருள் விற்பனை கடை, உணவு நிலையம் ஆகியவை தனியார் நிறுவனம் மூலம் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய கடற்படை, வாக்லி நீர்மூழ்கி கப்பலை விசாகப்பட்டினத்திலிருந்து சென்னை வரை கட்டணம் ஏதும் இன்றி இழுத்து வந்து மார்ச் 2013ல் சென்னை துறைமுகத்தில் நிலைநிறுத்தியது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம், இந்த நீர்மூழ்கி கப்பலை சென்னையிலிருந்து மாமல்லபுரத்திற்கு கடல்மார்கமாக இழுத்து, அதனை நிலத்தில் நிறுவுவதற்கு டிரேடக்ஸ் ஷிப்பிங் கம்பெனி என்ற நிறுவனத்தில் ரூ. 8.01 கோடியில் ஆணை வழங்கி உள்ளது என்றும், இந்த நீர்மூழ்கி கப்பல் மார்ச் 2014 இல் மாமல்லபுரத்தில் நிர்மானித்த இடத்தில் நிறுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும், இந்த திட்டத்திற்கு தமிழக அரசு ரூ. 10.00 கோடி நிதி ஒதுக்கி

ஆணையிட்டுள்ளது என்றும், இரண்டாம் நிலை பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனியார் நிறுவனத்தை தேர்வு செய்ய IL & FS என்கின்ற ஆலோசக நிறுவனத்தை நியமித்துள்ளது என்று துறை தெரிவித்தது. இதை தேர்வு செய்ய ஆறு மாதங்களாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும், கடல்சார் அருங்காட்சியகம் அமைக்கும் பணி மூன்று ஆண்டுகளில் தனியார் நிறுவனம் மூலம் முடிவுறும் என்று திட்டமிடப்பட்டுள்ளது என்றும், கடல்சார் அருங்காட்சியகம் சுற்றுலா பயணிகளை பெருமளவில் கவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என துறை மேலும் தெரிவித்தது.

கடவாழ் உயிரின காட்சியகம் ரூ. 250/– கோடியில் மாமல்லபுரத்தில் அமைத்தல்.

234. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு, சொந்தமான மாமல்லபுரத்தில் உள்ள சுமார் 15 ஏக்கர் நிலப்பரப்பில் கடல்வாழ் உயிரின கண்காட்சியகம் ரூ. 250/– கோடியில் தனியார் நிறுவனம் மூலம் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றும், இத்திட்டம் தனியாரின் பங்களிப்போடு மீன்வளத்துறை மூலம் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்த மீன்வளத்துறை ஆலோசகரை நியமிக்க உள்ளது. ஆலோசகர் மூலம் தனியார் நிறுவனம் தேர்வு செய்யப்படும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மீன் வளத்துறையோடு ஒத்துழைத்து திட்டம் நிறைவேற வகை செய்யும் என்றும் , இத்திட்டம் மூன்று வருடங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

235. சுற்றுலாத் துறையில் தெரிவித்தது போல் அனைத்துப் பணிகளிலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலும், குறித்த காலத்திற்குள் முடிக்கப்பெற்று சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் முடிக்கப்பெற வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

XXXIV சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் படகுகளை வடிவமைத்தல்

236. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் அந்தப் படகுகளை வடிவமைத்து ஆய்வு செய்யும் பணிகளை சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் மேற்கொண்டுள்ளார் என துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு உறுதி செய்யும் வகையில் துறைக்கு வழங்கப்பட்ட அறிவுரைகள், முந்தைய படகுகளுக்கும், தற்போது கழகத்தால் வாங்கப்பட்ட படகுகளுக்கும் பாதுகாப்பு அம்சங்கள் (Safety Aspects) குறித்து குழு அறிய விரும்பியது.

237. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொழில்நுட்ப ஆலோசகராக இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் கடல்சார் தொழில்நுட்ப துறையின் பேராசிரியர் டாக்டர். V. அனந்தசுப்ரமணியம், அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும், 2004க்குப் பின் வாங்கப்பட்ட அனைத்து படகுகளும் பாலிருதின் ஃபோம் (Polyurethane Foam) என்ற வேதியியல் பொருள் படகுகளின் அடியில் நிரப்பப்பட்டு தொழில்நுட்ப ஆலோசகர் அவர்கள் மூலம் மிதக்கும் தன்மையை உறுதி செய்த பின் சவாரிக்கு அனுப்பப்படுகிறது. மேலும் படகுகளில் ஓட்டை ஏற்பட்டாலோ அல்லது மழை பெய்தாலோ படகுக்குள் தண்ணீர் இருக்கை அளவு வரை வருமே தவிர சாயவோ மூழ்கவோ செய்யாது. இதற்கு முன்பு வாங்கப்பட்ட படகுகளுக்கு இத்தகைய பாதுகாப்பு வசதிகள் இல்லை. மேலும், பயணிகளின் பாதுகாப்பு கருதி, தற்போது வாங்கப்பட்ட படகுகள் அனைத்திற்கும் உயிர்காப்பு வளையம் பொருத்தப்பட்டுள்ளது. அதோடு பயணிகளுக்கு சவாரி செய்யும்

போது பாதுகாப்பு கவசம் அணிய அறிவுறுத்தப்படுகிறது. உயிர்பாதுகாப்புக்காக மீட்புப் படகு, படகு குழாமில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், அனைத்து படகு குழாம் மேலாளர்களுக்கும் பயணிகளின் பாதுகாப்பு குறித்து பின்பற்றவேண்டிய நிபந்தனைகளை சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது.

238. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக படகுகளை வடிவமைத்தலுடன் படகை இயக்குவதற்கு முன் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடைமுறையினை தவறாமல் பின்பற்றப்பட வேண்டும் என்று தெரிவித்த பின்னரே படகினை இயக்கப் பெற வேண்டும் எனவும் தவறுபவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கவும் குழு பரிந்துரை செய்கிறது.

XXXV. முட்டுக்காடு படகு குழாம் பகுதியினை சுத்திகரித்தல்

239. முட்டுக்காடு பகுதியில் உள்ள படகு குழாமில் தனியார் தொழிற்சாலைகளிலிருந்தும், குடியிருப்புகளிலிருந்தும் கழிவு நீர் கலப்பதால் அப்பகுதி முழுவதும் துருநாற்றம் வீசுகிறது என்றும் இதனை குழு காஞ்சீபுரம் மாவட்டத்தில் ஆய்வுப் பயணம் மேற்கொண்ட போது பார்வையிட்டது என்றும், இதற்கு துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்தும் குழு அறிய விரும்பியது.

240. முட்டுக்காடு படகு குழாம் , சென்னைக்கு மிக அருகில் இருக்கக்கூடிய சுற்றுலாத்தலம். வெளி மாநிலங்களிலிருந்து சட்டமன்றக் குழுக்கள் நம் மாநிலத்திற்கு அவ்வப்போது வருகின்றன என்றும், அக்குழுக்களை எளிதில் அவர்கள் சென்று வர வசதியாக சென்னைக்கு மிக அருகில் இருக்கக்கூடிய சுற்றுலாத்தலத்திற்கு அழைத்து செல்வது வழக்கம் என்றும், சமீபத்தில் வெளி மாநிலத்திலிருந்து வந்த குழு உறுப்பினர்களை முட்டுக்காடு சுற்றுலாத்தலத்திற்கு சென்று வர ஏற்பாடு செய்தோம். அங்கு சென்று வந்த வெளி மாநில சட்டமன்றக் குழுவினர் இப்படி ஓர் இடத்தை ஏன் எங்களுக்கு காண்பித்தீர்கள் , அந்த இடத்தில் கழிவு நீரை கடந்துதான் குழு உறுப்பினர்கள் படகில் சவாரி சென்றதாக தெரிவித்தார்கள். அவ்விடத்தில் லாரிகள் மூலம் பல இடங்களிலிருந்தும் கழிவு நீரை கொண்டு வந்து கொட்டுகிறார்கள். அதன் காரணமாக அங்கு சுற்றுலாப் பயணிகளினுடைய அபர்வம் குறைய நேரிடும். அந்த இடத்திற்கு பணத்தை செலவிட்டு சுத்தமாக வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யுங்கள். ஏனென்றால், சென்னைக்கு மிக அருகில் இருக்கக்கூடிய சுற்றுலாத்தலம் அதுதான் என குழு சார்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

241. மேலும் படகு சவாரிக்கு கட்டணம் வசூலிக்கும்போது அந்த இடத்தை சுத்தமாக வைப்பதும் துறையின் கடமையாகும் அடிப்படை வசதிகள் அங்கு மிகவும் குறைவாக இருக்கிறது. ஒரே ஒரு கழிப்பறை மட்டும் தான் இருக்கிறது. அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அது போதுமானதாக இருக்குமா என துறை தான் சிந்திக்க வேண்டும் எனவும், குழு தனது கருத்தினை தெரிவித்தது.

242. குழுவின் கருத்திற்கு அரசின் முதன்மைச் செயலர் முட்டுக்காடு படகு குழாமில் கழிவறை வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று குழுவின் பரிந்துரையை துறை ஏற்றுக்கொள்கிறது என்றும், படகுக் குழாமில் கழிவு நீர் கலக்காமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை துறை உடனடியாக மேற்கொள்ளும் என்றும், குழுவிற்கு உறுதி அளித்தார்.

243. மேலும், துறையின் கூடுதல் இயக்குநர், முட்டுக்காடு படகு குழாமில் சுற்றுலாப் பயணிகளுக்காக அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிக்காக ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவின் மூலமாக செயல்படுத்துவதற்காக சுமார் ரூ.3.25 கோடி அளவில் நிதியொதுக்கம் செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. முட்டுக்காடு படகு குழாமில் தற்போதுள்ள கட்டடத்தைப் புதுப்பித்தல், வாகன நிறுத்துமிடம், ஒளிரும் விளக்குகள் அமைத்தல், பார்வையாளர்கள் கோபுரங்கள் அமைத்தல், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் செய்து தருதல் உள்ளிட்டவை அதில் அடங்கும் என்றும் தெரிவித்தார்.

244. மேலும், அங்கு நிறைய எண்ணிக்கையிலான கழிவறைகள் மற்றும் தோட்டம் போன்ற அமைப்பினை ஏற்படுத்தி, முட்டுக்காடு படகு குழாமை ஒரு நல்ல சுற்றுலாத் தலமாக அமைக்கவேண்டும் என்றும் குழு தனது கருத்தினை தெரிவித்தது.

245. அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் சுற்றுலா ஆணையர் முட்டுக்காடு படகு குழாமைப் பொறுத்தவரையில் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவுகளை மற்றும் குடியிருப்பிலிருந்து வரும் கழிவுகள் அதிகமாக வருகிறது. இதைத் தடுப்பதற்காக துறையால் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

246. தொழிற்சாலை கழிவுகள் அதிகமாக இருக்கிறது என்றும், அரசு முதன்மைச் செயலர் மற்றும் சுற்றுலா ஆணையர் அவர்களின் கருத்திற்கு குழு துறைச் செயலர் அவர்கள் தெரிவித்தது போல் கடல் ஏற்றம் மற்றும் கடல் வற்றம் (high tide and low tide) எப்பொழுது ஏற்படும் என்று எதிர்பார்க்கமுடியாது என்றும், இதுபோன்ற சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்காக அரசால் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்றும் அத்தகைய சுற்றுலாத் தலங்களிலிருந்து அரசுக்கு அதிக வருமானம் கிடைக்கிறது என்றும் குழு தனது கருத்தினை தெரிவித்தது. அந்த வருவாய் அங்குள்ள ஊராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு அந்தப் பணம் செல்கிறது. எனவே, அப்பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து வரும் கழிவுகள் கொட்டாமல் இருப்பதற்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி மற்றும் நகராட்சிகளுக்கும் பொறுப்பு என்பதால் அவற்றை கொட்டாமல் இருப்பதை கண்காணிக்க வேண்டும் என்று குழு கருதுகிறது.

247. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவருடனும் கலந்து பேசி துறையின் ஆணையர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுடன் ஒரு சிறப்புக் கூட்டம் நடத்தி படகு குழாமை செம்மைப்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளுக்கு நவீன கழிப்பறை வசதிகளுடன் அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கும் தமிழக சுற்றுலாக்கள் குறித்த விவரங்களுடன் கூடிய மின்னணு திரை வைப்பதற்கும், கரையோரம் சிறுவர் பூங்கா அமைக்கவும் மெரினா கடற்கரையில் கூவம் முகப்பில் உள் மணல் திட்டுகளை வெளியேற்றுவது போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்த இயலுமா என்பது குறித்து பரிசீலிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

XXXVI . தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் நடத்தப்படும் திருமலை திருப்பதி கோயிலுக்கு கூடுதல் தரிசன சீட்டு ஒதுக்கீடு பெறுதல்

248. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தால் நடத்தப்படும் சுற்றுலாக்களில் ஒன்றான திருமலை திருப்பதி கோவிலுக்கு தரிசனம் செய்ய செல்லும் பக்தர்களுக்கு கூடுதல் தரிசனம் சீட்டு ஒதுக்கீடு பெற துறையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

249. அதற்கு, துறை திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் தரிசன சீட்டுக்கு கூடுதலாக ஒதுக்கீடு பெற 7.11.2013 மற்றும் 22.1.2014 ஆம் நாளிட்ட கடிதங்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், திருமலை திருப்பதி தேவஸ்தான செயல் அலுவலருடன் நேரில் பேச்சு வார்த்தை நடத்த நடவடிக்கை துறையால் எடுக்கப்பட்டு வருவதாகவும் துறை தெரிவித்தது.

250. மேலும், சென்னைக்கு அருகே திருப்பதி கோவில் அமைந்துள்ளதால், பிற மாநிலங்களிலிருந்து ஆய்வுப்பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டிற்கு வரும் சட்டமன்றக் குழுக்கள் திருப்பதி கோவிலுக்கு செல்ல வேண்டும் என்றும், அங்கு தரிசனத்திற்கு செல்லும்போது சிறப்பான தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு அக்குழுக்களால் இச்சட்டமன்ற செயலகத்திற்கு கோரிக்கையாக வைக்கப்படுகிறது. எனினும் அக்கோரிக்கையினை சில சமயங்களில் நிறைவேற்ற வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது என குழுவின் சார்பாக தெரிவிக்கப்பட்டது.

251. அதற்கு, துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அது குறித்து அரசு மட்டத்தில் ஆந்திர அரசுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற தகவலை குழுவிற்குத் தெரிவித்தார்.

252. ஆந்திர அரசுடன் மாநில அரசும் சுற்றுலாத் துறையும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி கூடுதல் தரிசன சீட்டுகள் ஒதுக்கீடு பெற வேண்டும் என்றும், ஆய்வுப்பணம் மேற்கொண்டு பிற மாநிலங்களிலிருந்து வரும் சட்டமன்றக் குழுக்களுக்கும் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றக் குழுக்கள் தரிசனத்திற்கு திருப்பதி செல்லும்போது சிறப்பு தரிசனம் செய்யும் வகையில் துறையால் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXXVII உதகை ஏரியை தொடர்ந்து சீரிய முறையில் பராமரித்தல்

253. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பெரு நிறுவன சமூகப் பொறுப்புணர்வு என்கிற தலைப்பின் கீழ் உதகை ஏரியை தொடர்ந்து சீரிய முறையில் பராமரிக்கும் வகையில் அமைக்கப் பெற்ற ஏரி மேலாண்மைக் குழுவின் செயல்பாடு குறித்து குழு அறிய விரும்பியது.

254. அதற்கு, துறை 5.10.2012 ஆம் நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் அரசாணை எண். 231–ன்படி உதகை ஏரியைத் தொடர்ந்து சீரிய முறையில் பராமரிக்கும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் 15 நபர் கொண்ட ஏரி மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும், அக்குழு சங்கமாக பதிவு செய்யப்பட்ட ரூ.50 லட்சம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும், ரூ.50 இலட்சம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு புதுப்பித்து ஊக்குவிக்கும் நிதியிலிருந்து (Environment Protection and Renewal Fund) வழங்கப்பட்டு சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அரசாணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு பொதுப்பணித் துறை, நகராட்சி மற்றும் குடிநீர்

வடிகால் வாரியம் ஆகிய துறைவாரியாக பணி செய்ய ரூ.477லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் துறை தெரிவித்தது. மேற்கண்ட பணிகள் அந்தந்த துறையின் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு ஏரியில் சுத்திகரிப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும், இப்பணிக்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வருடத்திற்கு ரூ.25 லட்சம் பராமரிப்பு நிதியாக அளித்து வருகிறது என்றும், துறையினால் மேற்கொள்ளப்படும் பணிகளை ஏரி மேலாண்மைக் குழு கண்காணித்து வருகிறது என்று துறை தெரிவித்தது.

XXXVIII மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் உதகை படகு இல்லத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள்

255. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதகை படகு இல்லத்தை மேம்படுத்த ரூ.530 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்தும், பணிகளை நிறைவு செய்ய துறையால் நிர்ணயிக்கப்பட்ட கால அளவு குறித்தும், பணிக்கான நிதி ஒதுக்கீடு எந்த ஆண்டு செய்யப்பட்டது என்றும், மத்திய அரசுக்கு பயனீட்டு சான்றிதழ் (Utilisation Certificate) எப்போது வழங்கப்படும் என குழு அறிய விரும்புகிறது.

256. அதற்கு துறையின் பொது மேலாளர் (நிதி) மொத்த ஒதுக்கீடான ரூ.530 இலட்சத்தில் 2013–2014–ல் ரூ.2 கோடி என்றும், அதற்குப்பிறகு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பங்கீடாக ரூ.2 கோடி வழங்கப்பட்டிருக்கிறது. அதுதவிர, 2012–2013–ல் ரூபாய் 1 கோடியே 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒருங்கிணைந்து எல்லாவற்றிற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகளையெல்லாம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் முன்னிலையில்தான் மேற்கொள்ளப்படுகிறது என்றும், கட்டிட வல்லுநர்களும் இதில் மிகப்பெரிய பொறுப்பு வகிக்கிறார்கள். இவர்கள்தான் நல்ல வடிவமைப்பு எது என்பதைப் பார்த்து முடிவு செய்கிறார்கள். இதில் கூடுதலாக செய்ய வேண்டிய பணிகள் ஏதேனும் இருக்கிறதா என்பதைக் கணிக்க கட்டிட வடிவமைப்பு வல்லுநர் ஒருவரை உறுப்பினராகச் சேர்த்து கண்காணித்து வருகிறோம் என்றும், 90 சதவிகிதப் பணிகளை கோடை விடுமுறை முடிவதற்கு முன்பே முடிக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம் என தெரிவித்தார்.

257. துறை நிர்ணயித்த காலத்திற்குள் அனைத்து பணிகளையும் முடிக்கப் பெற வேண்டும் என்றும், மத்திய அரசிற்கு பணிகளை முடித்தபின் **Utilisation Certificate** அனுப்ப வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

XXXIX. குழு ஆய்வுப்பயணம் மேற்கொண்ட மாவட்டங்களில் அபிவிருத்தி பணிகள்

தேனி மாவட்டம்

258. தேனி மாவட்டம் டாப் ஸ்டேசனுக்குத் தேவையான உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல் பணிக்கு கருத்துருவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அரசுக்கு அனுப்பி வைப்பதாக குழுவிடம் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

259. அதற்கு துறை சுற்றுலா ஆணையர் கடித எண்.7591/திமல–2/2013 நாள் 26.12.2013–ன் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து கருத்துரு கோரப்பட்டுள்ளது என்றும், அக்கருத்துரு உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்தியும் துறையின் சுற்றுலா அலுவலர் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்வதாகத் துறை தெரிவித்தது.

260. சுற்றுலா பயணிகளின் நலன் கருதி துறை துரிதமாக நடவடிக்கையினை மேற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

திண்டுக்கல் மாவட்டம்

261. குழு, திண்டுக்கல் மாவட்டத்தில் மன்னவனூர் பகுதியில் சுற்றுலா அபிவிருத்தி பணிகளின் கருத்துரு குறித்து குழு அறிய விரும்பியது.

262. ரூபாய் 3115.50 இலட்சம் மதிப்பீட்டில் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள மன்னவனூர் பகுதியில் சுற்றுலா அபிவிருத்தி பணிகளின் கருத்துருவை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கடித எண்.9366/2012/ஊவ7 நாள் 11.2.2013 மூலமாக அரசுக்கு பெறப்பட்டது என்றும், கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் முதன்மை திட்ட இயக்குநர் சென்னை அவர்களின் கடித எண்.TBGP15-26-2011 நாள் 4.2.2013 மூலம் மேற்படி பணிகளை JICA நிதியுதவி திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று துறை தெரிவித்தது.

263. மேற்படி பணியினை துரிதமாக மேற்கொண்டு அதற்கான நிதியுதவி பெற்று பணிகளை துவங்கி குறித்த காலத்திற்குள் முடித்து வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

திருவள்ளூர் மாவட்டம்

264. திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காட்டில் உள்ள ஏரியில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் படகு குழாம் அமைத்தல் குறித்து துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து குழு அறிய விரும்பியது.

265. திருவள்ளூர் மாவட்டம், பழவேற்காடு ஏரியில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் படகு குழாம் அமைக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கடித எண் 792/H2/2012 நாள் 14.8.2013–ன் மூலம் முதன்மை வன பாதுகாவலர் சென்னை–15, அவர்களுக்கு அனுமதி வேண்டி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், பழவேற்காடு ஏரியில் படகுக்குழாம் அமைப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் உச்சநீதிமன்றம் மற்றும் தேசிய வன ஆணைய நிலைக்குழுவின் (Standing Committee of National Board for Wild Life and the Hon'ble Supreme Court of India) முன்அனுமதி பெற வேண்டும் என முதன்மை வன பாதுகாவலர் அவர்களின் கடித எண்.WL5/21264/2013 நாள் 10.9.2013 மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், இதன் தொடர்பாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக துறையால் தெரிவிக்கப்பட்டது.

266. பழவேற்காடு ஏரிக்கு ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளும் பறவைகள் ஆர்வலர்கள் வருகைதரக்கூடிய இடமாகவுள்ளது. இங்குள்ள கடற்கரைப் பகுதியிலும் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வந்து செல்கின்றனர். கலங்கரை விளக்கத்தையொட்டியுள்ள கடற்கரைப் பகுதியில் வார இறுதி நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். இந்தப் பகுதியில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லை. குறிப்பாக, கழிப்பிட வசதி, குடிநீர் வசதியின்றி சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக பெண் சுற்றுலாப் பயணிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர் என குழு கருதியது.

267. எனவே, பழவேற்காடு கலங்கரை விளக்கத்திற்கு அருகில் ஊராட்சி அலுவலக வளாகத்தினருகே ஆண், பெண் இருபாலருக்கென தனியே கழிப்பறை, குடிநீர் வசதி செய்ய துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

விருதுநகர் மாவட்டம்

268. தேசிய நெடுஞ்சாலையில், சாலையோர மேம்பாடு வசதிகள் திட்டத்தின் கீழ், 2013–2014 நிதி ஆண்டில் மத்திய அரசிடமிருந்து நிதி கோரி சாலையோர வசதிகள் நிறுவப்பட்டு திட்டம் செயல்படவுள்ளது என்றும், அதற்காக 4 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு சுற்றுலாத் துறைக்கு நிலம் மாற்றம் செய்வது குறித்து கடிதம் மாவட்ட ஆட்சியர் மூலம், முதன்மைச் செலாளர் கடித எண்.72/5592/2012 நாள் 22.3.2013 வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்கிற தகவல் குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. நிலம் மாற்றம் குறித்து தற்போது நிலையினை குழு அறிய விரும்பியது.

269. அதற்கு துறை நிலமாற்ற கருத்துரு வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தின் பரிசீலனையில் உள்ளதாக துறை தெரிவித்தது.

270. மத்திய அரசின் நிதி உதவி பெற்று மேற்படி திட்டம் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளதால் துறை விரைவாக நடவடிக்கையினை மேற்கொண்டு நிலமாற்றம் கருத்துருவிற்கு வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று விரைவில் சாலையோர வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

திருநெல்வேலி மாவட்டம்

271. குற்றாலத்தில் ஐந்தருவி, புலியருவி போன்ற அருவிகளுக்குச் செல்லும் பாதை சரியில்லாமல் இருக்கின்றன என்றும் பொது மக்கள் குளிக்கக்கூடிய இடத்தில் பாசி பிடித்து வழுக்கிவிழும் நிலையில் இருப்பதாக குழு கண்டு அறிந்தது. எனவே அவ்வருவிகளுக்கு செல்லும் பாதையினை சொரசொரப்பான நடைபாதையாக மாற்றினால் நன்றாக இருக்கும் என குழு எண்ணியது.

272. அதற்கு துறையின் அரசு முதன்மைச் செயலாளர் சொரசொரப்பான நடைபாதை அமைப்பது பொதுப்பணித் துறையின் பணியாகும் என்று தெரிவித்தார்.

273. பருவகாலம் தொடங்குவதற்கு முன், சுற்றுலாத் துறை, பொதுப்பணித் துறை, உள்ளாட்சித் துறை மற்றும் வனத் துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து குற்றாலத்தில் குளிக்கச் செல்லும் பாதையை நல்ல முறையில் சரிசெய்ய வேண்டும் என்றும், சிறுவர்கள் விளையாடுவதற்கும், பெரியவர்கள் கண்டுகளிக்கும் வகையில் பூங்கா ஒன்று அமைக்கப்பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இராமநாதபுரம் மாவட்டம்

274. இராமநாதபுரம் நீண்ட கடற்கரையைக் கொண்டது என்றும், அங்கு கடல் சாகச விளையாட்டுகள் சுற்றுலா துறை மூலமாக அமைப்பதற்கான கருத்துரு குறித்து குழு அறிய விரும்புகிறது.

275. இராமநாதபுரம் கடற்கரையில் கடல் சாகச விளையாட்டுகள் தொடங்குவதற்கு ஏதுவாக செய்யத்தக்கமைக்கான அறிக்கை மற்றும் தேவை மதிப்பீடு ஆய்வு அறிக்கை (Techno Economic Viability Study and Demand

Assessment Study Report) ஆகியவற்றை தயாரிப்பதற்கு இராமநாமபுரம், மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களின் செயல்முறை ஆணை எண்.Q2/6584/2014,நாள். 24.1.2014 அன்று ITCOT Consultancy and Services Ltd. Chennai என்கிற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருவதாகவும் துறை தெரிவித்துள்ளது.

276. துறை, மேற்படி நிறுவனத்திடமிருந்து அறிக்கையினை பெற்று ஆய்வு செய்து கடல் சாகச விளையாட்டுகள் தொடங்குவதற்கான ஒரு வரையரையினை நிர்ணயித்து பணிகளை தொடங்கப் பெற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது. இது குறித்த அறிக்கை ஒன்றினையும் குழுவிற்கு அனுப்பி வைக்கப் பெற வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

277. இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் அருகில் உள்ள விவேகானந்தர் நினைவு இல்லம் செல்லும் சாலை சரியாக இல்லை என்றும், அதனை சரி செய்ய 27.9.2013 அன்று அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது என்று குழுவிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. அக்கருத்துரு குறித்து குழு அறிய விரும்பியது.

278. அதற்கு துறை, இராமநாதபுரம் ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்ட ரூ.6.00 கோடிக்கான கருத்துரு/ திட்ட மதிப்பீடுகள் அத்துறையின் பரிந்துரையுடன் நிதி ஒப்பளிப்பு கோரி அவ்வலுவலக கடித எண்.1856/திமவ.3/2013 நாள் 7.2.2014ன் படி அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக துறை தெரிவித்தது. இதற்கான நிதியினை மாவட்ட நிர்வாக நிதியிலிருந்து பணிகளை மேற்கொள்ள முடியுமா என்பது குறித்து சுற்றுலா ஆணையருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகவும் துறை தெரிவித்தது.

279. துறை மேற்படி பகுதிக்கான சாலையினை சரிசெய்ய வேண்டும்' என்றே குழு கருதுகிறது. எனவே அப்பணியினை மேற்கொள்வது குறித்து உரிய கலந்தாய்வினை விரைவில் முடிக்கப் பெற்று சாலை வசதியினை ஏற்படுத்த வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

280. இந்துக்களின் புனித ஸ்தலங்களில் ஒன்றான இராமேஸ்வரத்திற்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் நாள்தோறும் வந்து செல்கின்றனர் என்றும், அங்கு உள்ள இராமநாதசாமி திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் முதலில் கடலில் சென்று நீராடிவிட்டுத்தான் சாமி தரிசனத்திற்கு செல்கிறார்கள் என்றும், அவ்வாறு கடலில் குளிக்கும்போது கடல் நீரில் கழிவுநீர் கலப்பதாக புகார் வருவதாகவும் குழு அறிந்தது.

281. அதற்கு, துறை உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட குழு இராமேஸ்வரத்திற்கு வந்து ஆய்வு மேற்கொண்டது என்றும், அதன் பின்னர் கழிவுநீர் கலப்பது தடுக்கப்பட்டுள்ளது என துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்தார். மேலும் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரும், உயர்நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட குழுவும் ஆய்வு செய்தது.

282. கழிவுநீர் கடலில் கலக்காமல் இருப்பதற்கு இராமேஸ்வரத்துக்கு பாதாளச் சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தினால் மட்டுமே மேற்படி பிரச்சினை இருக்காது என்று குழு கருதுகிறது

283. எனவே, இராமேஸ்வரத்துக்கு பாதாளச் சாக்கடை அமைப்பது குறித்து ஆய்வினை மேற்கொண்டு விரைவில் அமைக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

திருவண்ணாமலை மாவட்டம்

284. குழு, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டபோது திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் பக்தர்கள் நலன் கருதி, அவர்கள் தங்கும் வகையில் அடிப்படை வசதிகளுடன் கூடிய மண்டபம் கட்டித்தரக் கோரி திருவண்ணாமலை மாவட்ட கிராமிய நல்வாழ்வு கழகச் செயலாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட மனுவில் கோரிய வசதியினை ஏற்படுத்த நிதி மற்றும் இடம் உள்ளதா என குழு அறிய விரும்பியது.

285. அதற்கு இணை ஆணையர் (பொறுப்பு) வசதியினை ஏற்படுத்த போதிய நிதி உள்ளது என்று தெரிவித்தார்.

286. திருவண்ணாமலை கிரிவலம் பாதையில் பக்தர்கள் தங்கும் வகையில் அடிப்படை வசதிகளுடன் கூடிய மண்டபம் திருக்கோவில் நிதியிலிருந்து கட்டிக் கொடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

